# அதிர்ச்சி நோய் எமக்கல்ல!

நாக.பத்மநாதனின் உருவகங்கள்

தமிழ்த்தாய் வெளியீடு

# அதிர்ச்சி நோய் எமக்கல்ல

(உருவகங்கள்)

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-2 -11- 1993
99058
யாழ்ப்பாணம்

PUBLIC LIBRARY
JAFFNA.

நாக. பத்மநாதன்

இது ஒரு தமிழ்த்தாய் வெளியீடு

322.42


| | |
|---|---|
| நூல் | - அதிர்ச்சி நோய் எமக்கல்ல (உருவகங்கள்) |
| எழுதியவர் | - நாக. பத்மநாதன் |
| வெளியீடு | - தமிழ்த்தாய் வெளியீடு, யாழ்ப்பாணம். |
| பதிப்பு | - மாறன் பதிப்பகம். 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். |
| ஓவியங்கள் | - 'தயா' |
| முதற்பதிப்பு | - புரட்டாதி, *1993.* |
| விலை | - ரூபா 50/- |

'துன்பம் உறூ வரினும்
செய்க துணிவாற்றி......'

-தமிழ் மறை

99058

தமிழினத்தின் வாழ்வுக்காக
தம்மை
முகம்தெரியாத் தற்கொடையாக்கும்
இளந்தளிர்களுக்கு......

## பதிப்புரை

நாக. பத்மநாதன் அவர்கள், எழுத்து லகிற்கோ இனவிடுதலைப் போராட்ட வாழ் விற்கோ புதியவரல்ல.

பொங்கிப்பிரவாகித்துப் புரண்டெழும் கட லலையைப்போலல்லாது, அமைதியான ஒரு நீர்ப் பாசனக் குளத்தைப்போலவே அவரது இலக் கிய வாழ்வும் - அரசியல் வாழ்வும் உருண்டோடி வந்திருக்கின்றது.

எமது மூத்தசந்ததி - ஐயாவைப்பற்றி ஓர ளவு தெரிந்துவைத்திருந்தாலும் இளைய தலை முறைக்கு ஐயாவை அறிமுகப்படுத்தியது விடுதலைப் புலிகள் - அதில் வெளியாகிவரும் அவரது உருவகவடிவிலான இலக்கியப்படைப் புகள்தான் என்றால் மிகையாகாது.

ஏறக்குறைய கடந்த மூன்று வருடங்களாக அவர் எழுதிவரும் எழுத்துக்கள், ஒரு புலிவீர னின் துப்பாக்கியிலிருந்து கனன்று செல்லும் ரவையைப்போல ஆவேசம் நிறைந்ததும், சக்தி வாய்ந்ததுமாகவே இருக்கின்றன.

சமூக அநீதிகளையும் தனிமனித பலவீனங் களையும் அவரது பேனா குறிவைக்கும்போது ஆணித்தரமான கருத்துக்களை வெளிப்படுத் தும் அதேவேளை, புலிவீரர்களின் வீரத்தை - அவர்களின் தியாகத்தை - சித்திரிக்கும்போது போர்க்குணம் கொண்டதாக மாறிவிடுகின்றது.

இந்தவகையில், போராட்ட நிகழ்வுகளை இலக்கியமாக்கும் பணியில் போராளிகளுடனேயே வாழ்ந்து தனது உச்சப் பங்களிப்பை நல்கி வரு கின்றார்.

இதுமட்டுமல்ல, எமது தாய்நிலத்தில் சிங்கள பேரினவாதப்புயல் வேகங்கொண்டு வீசத் தொடங்கிய நாளிலிருந்து, அதற்கெதிரான போராட்டங்களிலும் ஐயா ஒரு தொண்டனாக பங்குபற்றி வந்திருக்கின்றார்.

அந்தப் போராட்டவாழ்வில் எவ்வளவோ துன்பங்களையும் அசௌகரியங்களையும் விரும்பியேற்று, தமிழ்மக்களின் அரசியல் சுபீட்சத்திற்காகத் தன்னை வருத்தி உழைத்திருக்கின்றார்.

இந்த முதிர்ந்த வயதில் அவரது இதயம் குறைந்த வேகத்துடன் துடிக்க முற்பட்டாலும் அவரது எழுத்துப்பணி, இப்போதுதான் வேகம் பெற்றிருக்கின்றது. இதற்கு, கடந்த மூன்று வருடகால அவரது எழுத்துப்பணி சிறந்த உதாரணம்.

ஐயா தனது முன்னுரையில் குறிப்பிட்டதைப்போல, கடந்த நாற்பத்துமூன்று வருட வாழ்வில் அவர் எழுதிய உருவகங்கள் இந்த நூலிலுள்ள முப்பத்துநான்குதான். ஆனால், இந்த முப்பத்துநான்கில், கடந்த மூன்றுவருடத்தில் அவர் எழுதியவை பதினாறு என்பது குறிப்பிடத்தக்கது. சிரித்திரன், சுடர், வெளிச்சம், சாளரம், ஆதாரம், ஆகிய இதழ்களிலும் அவரது ஆக்கங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அதிர்ச்சி நோய் எமக்கல்ல என்ற இந்த நூலில், மண்பற்றும் இனவிடுதலையும் - இதற்கான தியாகங்களும் அலை வீசி நிற்பதைக் காணலாம்.

இதேவேளை, ஐயா எழுதிய வள்ளுவர் வழியில் வீரம், மானம், என்ற நூல் எமது 'தமிழ்த்தாய் வெளியீடாக' 1992 இல் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தாய் வெளியீடு,
யாழ்ப்பாணம்,
தமிழீழம்.
*7. 9. 1993*

# சிறப்புரை

## எழுபது வயது இளைஞனைப்பற்றி
## நாற்பது வயதுக் கிழவனின் மதிப்பீடு

முதுமை சுமையாகிப் போவதற்கு,
பேணப்படும் சமூக நிலையும்;
பண்பாட்டு வாழ்நிலையும், காரணிகளாகின்றன.
அறுபது அகவைக்கு மேல்......
தொட்டதுக்கும் குற்றம் கண்டுபிடிக்கும்,
'நக்கீரர்'களாகி;
பொல்லாப்புத் தேடுவது,
எல்லோருக்குமான பொது விதியா?
இல்லை.
அந்திமகாலத்தில் '' அறுவை '' ஆவதால்
'' பழசு '' களைப் பார்க்குமிடத்தில்
தலைகளை மறைத்துக் கொள்ளுதல்

கட்டாய பாடமாகின்றது.
இந்தநிலை ஏதுமில்லாமல்,
எழுபதுவயதிலும் இருபதுவயது இளைஞனைப்போல
நினைவுதடுமாறாத "கம்பீரம்" ஒன்று
எங்களுடன் வாழ்கிறது.
ஒட்டி உறவாடக் கூடிய
விழுதெறிந்த விருட்சமொன்று
எமக்கு நிழலாக நின்று குடைபிடிக்கிறது.
நேரம் கிடைக்கும் போதிலெல்லாம்
நாங்கள் நிழல் தேடிச் செல்வோம்.
மனதுக்குள் இனிய மலர்கள்
இதழ்விரித்துக் கொள்ளும்.
இந்த மரம் நிழல்மட்டும் தானா தரும்?
இல்லை,
அறிவுப்பழம் தந்தும் ஆதரிக்கும்.
யாரிவர்?
ஐயா, நாக. பத்மநாதன்.
திருக்குறள்,
பலருக்கு அலுமாரியை அலங்கரிக்கும் பொருள்
இவருக்குமட்டும்
வாழ்வுக்கு வழிகாட்டும் பாதச்சுவடு.
பொய்யாக வாழ்ந்து பிரகாசிப்பதிலும் பார்க்க

மெய்யாக வாழ்ந்து
ஒன்னைத் திரிவெளிச்சமாவது இருக்கிறதே
ஆகா, அது எவ்வளவு அழகானது!
ஐயா இதற்கு வாழ்ந்துகாட்டி விளக்கும் தந்தவர்
தமிழுக்காகவும்
தாய்மண்ணுக்கானதுமான
போராட்ட ஓட்டக்களத்தில்
புதிது புதிதாக
இவரின் பாதப்பதிவுகள் படிவதால்
காலக்காற்றினால்
ஐயாவைக் கரைக்க முடியவில்லை.
மூன்று பக்க முன்னுரைக்குள்
ஐயாவின் முழுத்தோற்றத்தையும்
எப்படி வரையலாம்?
முடியாது.
புறத்தோற்றத்தைக் கமரா பிடித்துக் கொள்ளும்
ஐயாவின் அக அழகைப் படம்பிடிக்க
கருவியொன்று கைகளில் வேண்டும்.
யப்பான்காரனுக்கு கடிதம் எழுதலாம்
விஞ்ஞானம் தோற்றதென்றே விடைவரும்.
அறிவும், அடக்கமும் ஒன்றாகக் குடியிருப்பது
அபூர்வம்.
பதவியும், பண்பும் கூடப்பிறப்பது குறைவு.
ஐயாவிடம் மட்டும்

எல்லாமே கூட்டுக் குடும்பமானது.
நா. ப. வின் அறிவின் ஆழத்துக்கு
ஒரு உவமை சொல்லு?
'நிலாவரைக் கிணறு'.
'பிழையான உவமை.'
ஆழத்தை அளந்தறிந்த கிணற்றை
ஐயாவுக்கு எப்படி உவமையாக்கலாம்?
நேரடி விவரணங்கள் நெஞ்சத்தை ஊடுருவும்,
உருவகங்களோ உள்ளே அதிர்வுகளை ஏற்படுத்தும்.
அதிர்வுகள் எல்லாமே விளைவுகளை உருவாக்கும்.
சமூகம் தன்காலத்தில்
வேண்டப்படும் விளைவுகளைத்தான் விரும்புகின்றது.
விருப்பங்களை நிறைவேற்ற துணைநிற்பவையே
அழியாத இலக்கியங்களாகின்றன.
ஐயாவின் உருவகங்கள் வெறும் கதைகளல்ல
கண்ணெதிரே காணும் சத்தியத்தின் தரிசனங்கள்
எழுதுபவன்
எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும்
அவனது எழுத்து உன்னதமானால்
அதுபோதும்.
இப்படியும் ஒருகுரல் அடிக்கடி கேட்கிறது.
நாங்கள் இதற்கு மாறுபட்டவர்கள்.
நித்தக்குடிகாரன்
போதைப்பொருட்களின் தீமைபற்றி

போதிக்க முடியாது.
கணிகையர் வீடே கதியெனக் கிடப்பவன்
பத்தினிகள் பற்றி பாட்டெழுத முடியாது -
எழுதவும் கூடாது.
எழுத்தும் வாழ்வும் எப்படி வேறுபட முடியும்?
ஐயாவின் வாழ்வின் உன்னதங்கள் பற்றி
அவரைத் தெரிந்தவர்களுக்கு தெரியும்
விளம்பரத்தை விரும்பாதவர் என்பதால்
எல்லாவற்றையும்
வெளிச்சம் போட்டுக் காட்ட முடியவில்லை.
''சிங்களம் மட்டும் சிம்மாசனமொழி:
வேண்டுமானால்
தமிழ் பக்கத்தில் நின்று சாமரம் வீசட்டும்''
பண்டாரநாயக்கா நடுநிலை வழுவியபோது
ஐயா அரசசேவை முடியைத் துறந்தவர்.
அத்தாணி மண்டபத்திலிருந்து வெளியேறி
வீதியில் நின்று விளக்கம் கேட்டவர்.
எங்கள் தாயகத்தின் எல்லைவேலியை
எதிரிக் கறையான்கள் தின்று தொலைப்பதால்.. ...
''நாட்டின் எல்லைப்புறம்
விரைவில்
வீட்டின் கொல்லைப்புறமாகலாம்''
''குடாநாட்டுக்குள் குந்தியிருப்பது குற்றம்''
''தமிழன்,

எல்லையில் மனித வேலி ஆகவேண்டும்''-
இப்படி முதல் முழக்கமிட்ட மூலவர்களில்
ஐயாவும் ஒருவர்.
முப்பது வருடங்களுக்கு முன்பே
வன்னியின் எல்லையில் காடுவெட்டி
காட்டு யானைகள் வராமல்
கட்டுத்துவக்கோடு காவல் இருந்தவர்.
ஐயா வீட்டிலிருக்கும் நாட்கள்
வெகு குறைவு.
போராளிகளின்
கூட்டிலிருந்து குதூகலிக்கும் நாட்களே அதிகம்.
ஐயாவுக்கு ஏறக்குறைய எழுபது வயதாகிறதாம்
எப்படி நம்புவது?
இன்னும் ஒரு இளைஞனைப் போலவே
எழுந்து நடப்பார்.
தாயக விடுதலைத் தாகம் சுமந்திருப்பதால்
ஐயா பகலில் பாயில் படுத்திருந்ததை
நான் பார்க்கவில்லை.
''தம்பியின் காலத்தில் தமிழீழம்''
என்று நம்பியிருப்பவர்.
ஐயாவுக்கு வாழ்த்துச் சொல்ல
நான் 'வயதுக்கு வரவில்லை'
ஆலோசனை சொல்ல எனக்கு ''அறிவுஇல்லை''
அதனாலே......

இந்த உருவகங்களை உருவாக்கிய
ஐயாவின் ஆற்றலுக்கு
நான் தலைவணங்கிக் கொள்ளுகிறேன்
நன்றி.

அன்புடன்,

புதுவை இரத்தினதுரை

புத்தூர் கிழக்கு,
புத்தூர்,
20.8 1993

# முன்னுரை

**எ**தை எழுதுவது?

'முன்னுரை' என, நான் இதில் எழுதுவதற்கு என்ன இருக்கிறது!

ஏதோ ஒன்று தொடர்ந்து தூண்டிக் கொண்டே இருந்தது. எனினும் கடந்த 43 வருடத்தில் என்னால் எழுதமுடிந்த உருவகக் கதைகளோ,காட்சிகளோ, இந்த முப்பத்துநான்கு மட்டுமே.

*1950:* குளக்கரையில் வாடிய அல்லிமலர் பற்றி எழுதினேன். இது 'தினகரனில்' வெளி வந்தது. இதனையிட்டு எனது தந்தையார் காட்டிய ஆர்வம் என் நெஞ்சத்தில் நின்று நெகிழ்த்துகிறது.

*1961:* மயிர்க்கொட்டிப் புழுவின் புது வாழ்வுபற்றிய கதை. இது என் அன்பு நண்பர் கவிஞர் கரவைக்கிழார் அவர்களது உறவினால் எழுந்த கதை; நாங்கள் அரசாங்க வேலையை விடத்தீர்மானித்த வேளையில் உருவாகிய கதை. தமிழாக வளர்ந்தது இந்நட்பு.

*1970:* அரசியல் உணர்வோடு ஓமந்தையின் நவ்வி, பாலமோட்டைப் பகுதிகளில் பெரியார் பாலசிங்கம் ஐயா அவர்களுடன் 'எல்லைகாக் கும்' பணியில் ஈடுபட்ட வேளையில் எழுந்ததே 'அது' எனும் முள் பற்றிய உருவகம்.

அதே ஆண்டு 'ஊர்க்காவல்' எனும் உணர் வுடனான உருவகத்தை 'சிரித்திரன்' ஆசிரியர் - சிந்தனையாளர் சிவா - அவர்களின் நெருங்கிய தொடர்பும் ஊக்கமும் எழுதத் தூண்டிற்று. அவர் என்னைத் தொடர்ந்து எழுதவைத்தவராவர்.

*1977:* தமிழீழ விடிவைக்காட்டும் உருவக மொன்று 'சுதந்திரன்' இதழில் வெளிவந்தது. ஆனால் -

*1990:* 'வீரம், மானம், ஓர்மம்' என 'விடுதலைப்புலிகள்' இதழில்எழுதியதும்இதனைத் தொடர்ந்து எழுதக் கிடைக்கும் உருவகங்களும் எனது நோயைத் தீர்க்கும் மருந்தாகிவிட்டன; புது வீறுடன் என்னால் வாழமுடிகிறது. ஏதும் அமைதிச் சூழலையே யான் முன்னர் விரும்பிய துண்டு. ஆனால் இன்று, விடுதலைப் புலிகளின் தியாக வாழ்க்கையில் ஓரளவேனும் பங்குபற்றும் போது, இன்னும் கூடிய மன அமைதியையும் மகிழ்வையும் காண்கிறேன். எனது எழுத்தும், வாழ்வும், இந்த அநீதிகளையும் இன அழிப்புக் களையும் எதிர்த்து நிற்கும் தமிழீழ விடுதலைப் போராட்ட வேள்விக்கே ஆகுதியாக வேண்டு கிறேன்.

இதிலிருந்து விலகுதற்கு முதிர்ந்த வயதைச் சாட்டாக்க முடியாது! தமிழ்த்தாயை எண்ணி, இதை அன்று தொடக்கினோம். காலத்துக்கேற்ப வேகத்துடன் இதனை, ஆயிரம் மடங்கு இடர் நடுவே, இன்று தொடர்ந்து நடாத்தும் இளம் தளிர்களுடன் நாம் இணைந்து நிற்பதே கடன். எம் இளம் தலைமுறையில் ஒருவன், இன்று உலகம் வியக்கும் பெரும் தலைவனாய் நிற் கிறான்; தயங்காது எம்பங்கை அளிப்போம்.



முதலிற் கூறியதைப்போல, முன்னுரைஎன இந்நூலில் நான் எழுத என்ன இருக்கிறது? இது மொத்தத்தில் ஒரு கூட்டு முயற்சியே.

இந்த உருவகங்கள் ஒவ்வொன்றையும் பல வாரம் அல்லது மாதம் எடுத்து, பட்டுணர்வும் கொண்டேதான் எழுதினேன். எனினும் இவற்றை அழியாது நூல் வடிவமாக்கியுள்ளனர் தமிழ்த்தாய் வெளியீட்டினர்; அவர்களுக்கு என் நன்றி.

இத்தகையதோர் சிறப்புரையை, தலை சிறந்தவிடுதலைக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் தந்துள்ளமை என் நெஞ்சத்தை நெகிழ்த்தி நிற்கிறது. இதற்கு என்றும் என் நன்றி உரித்தாகும்.

என் மகன்போலக் கூட நின்றுதவும் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களுக்கும் -

உருவகங்களுக்கு ஒளியூட்டும் ஓவியங்களைத் தந்துள்ள தயா அவர்களுக்கும் -

என்னை ஒரு பொருளெனப் புகைப்பட மெடுத்த மாமனிதர் எஸ். ரி. அரசு அவர்களுக் கும்-

தமது சொந்த நூல் போல படித்துத் திருத்தங்களைத் தந்த நண்பர் யேசுராசா அவர்களுக்கும் -

இந்த ஆக்கங்களை அவ்வப்போது வெளியிட்ட இதழாசிரியர்களுக்கும் -

அவற்றைப் படித்து தம் ஆக்கக் கருத்துக்களை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் -

முழு ஒத்துழைப்பைத் தந்த மாறன் பதிப்பகத்தினர் அனைவருக்கும் -

என் அன்புடனான நன்றியறிதலைக் கூறிக் கொள்ளுகிறேன்.

என் அறிவாக நின்றியங்கும் வள்ளுவப் பெருந்தகையாரை மனத்திலிருத்தி வணங்குகிறேன்.

இந்நூலிலுள்ள யாவும் உருவகக்கதைகளென யான் கூறவில்லை; உருவகங்கள் என விரும்பின் கூறலாம்.

ஒரு சொல்லில் ஓர் இலக்கியத் தாக்கத்தை ஏற்படுத்த முடியுமானால், அது உருவக வடிவின் மூலமே முடியும் - 'எருமை' என்றோ 'மானே, மயிலே' என்றோ சொல்லிப் பாருங்கள்......!


வணக்கம்.

அன்பன்
நாக. பத்மநாதன்.

*191, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*07. 09. 1993.*

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அது | ... | 01 |
| ஊர்க்காவல் | ... | 04 |
| இதுதான் உலகம் | ... | 06 |
| உறுதி | ... | 09 |
| பொங்கல் | ... | 11 |
| சேவையின் அடியில் | ... | 13 |
| வெறுமை | ... | 16 |
| முட்டைத் தத்துவம் | ... | 18 |
| செயல் வரிசை | ... | 20 |
| பூவாய் மலர்ந்த புழு | ... | 23 |
| பொய்யனார் புதுமை | ... | 26 |
| வீரம், மானம், ஓர்மம் | ... | 30 |
| முளைகள் | ... | 33 |
| சிலுவை | ... | 35 |
| சாவின் சாவு | ... | 39 |
| கடைசிப் பரிசு | ... | 42 |
| உண்மையின் வீச்சில் | ... | 45 |
| கழுதையல்ல கட்டெறும்பு | ... | 48 |
| தெளிவு | ... | 51 |
| பட்டறிவு | ... | 53 |
| சக்கை லொறி - சீதனத்திற்கு | ... | 56 |
| விநோதக் குஞ்சு | ... | 59 |
| சிறுமையிற் பெருமை | ... | 61 |
| அதிர்ச்சி நோய் எமக்கல்ல | ... | 64 |
| உயர்வு | ... | 67 |
| ஆதாரம் | ... | 70 |
| புதுவருடம் | ... | 72 |
| தமிழீழத் திருநாட்டில் | ... | 75 |
| ஈகம், வீரம் | ... | 79 |
| மண்ணின் குரல் | ... | 82 |
| அழியாத ஒன்று | ... | 84 |
| மனக்கிருமி | ... | 87 |
| எது? | ... | 90 |
| வரலாற்றுப் பதிவில் | ... | 93 |



# அது

அது மலர் அல்ல, எனினும் செடியின் ஒரு பகுதியாகவே அது இருந்து வந்தது.

அவ்விதமாயின் இலையா? இல்லை! இல்லை!

எனினும், அது கொடியுடன் ஒன்றி இணைந்து அதன் ஒரு பகுதியாய் வாழ்ந்து வந்தது.

அவ்விதமாயின் ஏதோ பூச்சி புழு அல்லது தண்டைத் துளைத்து வேரோடும் புல்லுருவி இனமா? ஐயோ, அவ்விதம் எண்ணாதீர். அதுபெரும் அநீதியாக முடியும்! அது தபம் செய்யும் மனிதனிலும் பார்க்கப் பெரு வைராக்கியத்தோடு இருந்து வந்தது. அதைக் கைகூப்பித் தொழவே என்னால் முடிந்தது.

வெயில் தழுவ அது இலங்கிற்று.

மேலே, வெண்முகில் ஒளிரும் நீல வானம்; கீழே தூரத்துத் தரைக்கப்பால்

தொடுவான் வரை தெரியும் கடல். இன்னொருபுறம் தொலைப் பார்வைக்கு மட்டும் எட்டக்கூடிய தூரத்துப் பனந்தோப்பின் சாயல். மீண்டும் அங்கிருந்து இங்கு வரை கரையோர நிலம். இதைத் தொடர்ந்தும் நிலமேதான்! இதைக் காய்ந்த பசுந்தரை என்பதா?

இங்குதான் அது......

......அது வெயில் தழுவ ஒளிர்ந்தது. என் நெஞ்சத்தோடு அது நெருங்கி நின்றது. அதை அணைத்துக் கசிந்துருக என்னால் முடிந்தது.

சீ, பைத்தியமா?

அது நறுமணம் கமழும் மலரா? இல்லை!

பச்சைப் பசேலென்ற அழகு இலையா? இல்லை!

துவளும் மென்கொடியும் அதுவல்ல. அவ்வித எதுவும் அங்கில்லை. குத்துச் செடியின் ஒரு பகுதியாய் அது இருந்தது.

கண்ணே என்பது உட்தொனிக்க உன்னை எவ்விதம் அழைத்திட......? என்றேன்.

''என் பெயரா? என்னை மனிதர் எவ்விதமெல்லாமோ எண்ணுகிறார்கள். பலருக்கு என்னைப் பிடிப்பதே இல்லை'' என அது மெல்லென நகைத்தது. அந்த அசைவிலே வெயில் தவழ்ந்து விளையாடிற்று.

என் பார்வை அதனையே வருடிற்று. உள்ளம் காத்து நின்றது.

''என் பெயரா? நான் நல்ல மலரென்ற பெயருக்கு உள்ளாகி இருக்கலாம். மென் தளிராக மாறி இருக்கலாம். வேறு நல் உறுப்பாக இலங்கியிருக்கலாம். இன்று நான் அது எதுவும் அல்ல—...

நான்... என் பெயர்... ஒரு முள்'' என்றது.

அதன் எதிரொலியாய் என் நெஞ்சம் அதை அணைத்துக் கொண்டது. இணைத்துக் கிடந்தது.

அதன் குரல் மட்டும் மெல்லெனக் கேட்டது.

"என் பெயர் முள். நான் மென்மையுமல்ல; நான் காப்பது மென் மலர்க் கொடியையுமல்ல. இருந்தும் எம் நிலம் – தாய் மண் – கருகிப் பாலையாகிவிடாமல் அதற்கொரு போர்வையாய் மாறி முள்ளாய் வாழ்வதில் எத்தனை சுகம்! எவ்வளவு இன்பம்! தெரியுமா?'' என்றது.

பூமி மெய் சிலிர்த்தது!

மலர்
*பங்குனி 1970*



# ஊர்க்காவல்



**அ**தே நாய்தான்!

இல்லை, நாய்கள் எனக்கூறவேண்டும். அங்கு நின்றவை இரண்டு நாய்கள்! நீங்களும் நானும் எல்லோரும் பள்ளிக்கூட நாட்களில் சிறு கதையாய் படித்திந்த நாய்களே அவை இரண்டும்!

ஒன்று கொழுத்த நாய். கழுத்தில் தன் எசமானன் கட்டிவிட்ட பட்டியை அது பெருமையோடு தாங்கிக்கொண்டிருந்தது.

மற்றது, ஒரு எசமானையும் அண்டி நிற்க முடியாத பரதேசி நாய்! சுதந்திரம் என்ற உணர்வின் பரிசாய் அது எலும்பு தெரிய மெலிந்து நின்றது. இருந்தும், அதிலும் அதற்கொரு மிடுக்கு!

பவிசுக்குரிய பெரிய நாய் அந்த ஊர் சுற்றி நாயுடன் தான் கதைக்கப்போனது தவறு, அதனைத் திருத்தமுடியாது என்ற முழு நினைவோடு தன் எசமானரிடம் போய்க்கொண்டிருந்தது. அந்த எசமான

ரும் எங்கள் சமூகத்தின் ஒரு 'பெரிய' மனிதர்தான்!

சாப்பிட்டுவிட்டு சுகமான உறக்கத்தில் அவர் ஆழ்ந்துகொண்டிருந்தார். எசமானரைப் புரிந்த நாயல்லவா அது? எனவே தட்டாமல் குழப்பாமல் அவரது காலடியில் தலைவைத்து அது படுத்துக் கொண்டது.

திருப்தியின் முடிவு உறக்கம். அது இருவரையும் ஆட்கொண்டது. தணிந் தெரிந்த சிறு விளக்கு அவற்றுக்கு அழகு செய்துகொண்டிருந்தது.

ஊரின் வெளியிலோ கும்மிருட்டு.

இப்போது நடுச் சாமம்.

பயங்கர நிசப்தம் குடிகொண்ட வேளை. இவற்றினிடையே ......

ஏதோ ஒரு காலடிச்சத்தம் மெல்லெனக் கேட்கிறது.

அந்த ஒலி தரும் விழிப்போடு பார்த்தால் ஓர் உருவம் தெரிகிறது. அது மெல்லெனத் தெருவழியே பதுங்கி நகர்ந்து வருகிறது. அது சந்தியில் வந்து திரும்பும் போது –

"வள்" என விழுகிறது ஒரு குரல். தொடர்ந்தும் பெரும் கர்ச்சனையுடன் துரத்திக்கொண்டோடுகிறது அந்த ஊர்சுற்றி நாய்!

அவன் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறான்! பெரிய வீட்டுக்கு அப்பாலுக்கப் பாலும் அவன் ஓடி மறைந்தபின்னரே அது திரும்புகிறது. கிளர்ந்தெழுந்த அதன் உளத் துடிப்பு ஒலிப்பெருக்காய் நின்று ஊரைக் காக்கிறது.

சிரித்திரன்
*ஐப்பசி 1970*



6

# இதுதான் உலகம்

அன்று மலர்ந்த அல்லிதான் அக் குளக்கரையில் கிடந்த அம்மலர். எனினும் அதன் அழகிய மென்மையான வெள்ளை இதழ்கள் கொடிய வெயிலில் வாடி வதங்கி விட்டன. அதனுடன் சேர்ந்து, அதைக் கம்பீரமாகத் தண்ணீரில் தாங்கி நின்ற அதன் குளிர்மை பொருந்திய தண்டும் சோர்ந்து வளைந்து. அக்கருஞ்சேற்று மண்ணில் புரண்டு கிடந்தது. பாவம்! இவ்விதம் சோர்ந்து கிடந்த அம்மலரை இரக்கமற்ற பகலவன் மேன்மேலும் வாட்டி வதக்கிக் கொண்டிருந்தான். அக்கண்மணி மலரின் சிறிய நேர வாழ்வும் இவ்விதமா கழிய வேண்டும் என நினைத்தபோது, என்னை அறியாமலேயே என்மனம் சொல்லமுடியாத வேதனை அடைந்தது.

அம்மலருடன் பிறந்து ஒன்றாய் மலர்ந்த மற்றைய மலர்கள் எல்லாம் இன்னும் எவ்வளவு ஆனந்தமாக வான வெளியை நோக்கி அகமகிழ்ந்து நின்றன! அப்போது அவற்றின் முகத்தில் திகழ்ந்த அழகுதான் என்ன! அவ்வழகில் மயங்கி

வெறிபிடித்த அக் கள்ளக் காதலன் கரு வண்டும் அம்மலர்களின் நடுவே பறந்து கொண்டும் அவைகளைச் சுற்றி வட்ட மிட்டுக்கொண்டும் ஆடி அசைந்து பறந்து திரிந்து கொண்டிருந்தான். அக்கொடிய பகலவன் விடுத்த கிரணங்களும் இவ்வா னந்த உலகிற்கு வந்ததும் தங்கள் கரு மத்தையே மறந்து, அப்படியே மலர்களின் இதழ்களை மெல்லஸ்பரிசித்தபடி, தண்ணீ ரில் தாங்களும் ஆனந்தமாக நர்த்தனம் செய்துகொண்டிருந்தன.

இவ்விதம் அக்குளத்திலுள்ள எல்லா ஜீவன்களும் எல்லையற்றஇன்பத்தில் மூழ்கி, தங்கள் வாழ்க்கையில் ஆனந்த ஸ்வரத்தில் உச்சஸ்தாயியை மீட்டிக்கொண்டிருந்த போது, இவைகளுக்கருகில் அந்த ஒரு மலர் மாத்திரம் தனியே ஈனஸ்வரத்தில் சோகராகத்தை வருடிக்கொண்டிருந்ததை, யார்தான் கவனித்திருப்பார்கள்?

இதை என்னால் பார்த்துக்கொண்டு சகித்து நிற்க முடியவில்லை. மெதுவாக என் மலரை இருகைகளாலும் எடுத்துக் குளத்தின் கரைத்தண்ணீரில் விட்டேன். அதுவும், வேண்டாம் இக்கொடிய வெயிலின் சகவாசம் என்பதைப்போலத் தண்ணீர் மட்டத்துக்கு உள்ளேயே மண்டிக்கிடந்தது. இனிமேலாவது அது கருணை நிறைந்த தன் தாய் போன்ற தண்ணீரின் அணைப் பிலேயே சுகமாயிருக்கட்டும் என்று நினைத் துக்கொண்டு, ஒரு சிறிதளவு ஆறுதலுடன் அவ்விடத்தை விட்டு அகன்றேன்.

மறுநாள் அதேநேரம். எல்லாம் முதல் நாள்போலவே ஆனந்த மயமாகக் காட்சி அளித்தன. எனினும் எனக்கு அவ் வானந்தத்தில் மனம் செல்லவில்லை. அம் மலர் என்ன ஆயிற்று, இப்போது எவ் விதம் இருக்கிறது என்பதை அறியத்தான் மனம் அவாவித் துடித்தது. அம்மலர் எங்கே? அதோ......

அதோ, தெளிந்த நீரின் மட்டத்தில் ஏதோ கலங்கித் தெரிகிறதே! அது என்ன? மலரா? என் அதே மலரா இவ்விதம் அழுகிக்கிடப்பது? அதன் அழகுதான் எங்கே? அழகுதான் போய்விட்டாலும்

அதன் கோலம்தான் என்ன? அது தன் தாய்க்கொடியுடன் இருந்தபோது தாயைப் போலவே தானும் நடந்து கொண்ட அதே தண்ணீரா இவ்விதம் இப்போது இதன் உருவையே குலைத்தது? என்னகொடுமை! என்னால் தாங்கமுடியவில்லை.


பாய்ந்து எடுத்தேன் அம்மலரை. பாதி இதழ்கள் மலரிலிருந்து பிரிந்து குளத்து நீரிலேயே விழுந்தன. "நீயா இந்தக் கோலத்தில் இருக்கிறாய். உனக்கா இந்தக் கதி" எனக் கதறினேன். அதற்கு இன்னும் கொஞ்சம் அறிவு இருந்தது. மெதுவாகச் சிறிது கண்ணைத் திறந்து, "இது தான் உலகம்" என்றது. "என் கண்மணி! இதுதான் உலகமா? என்ன? இதுதானா உலகம்?" என்று மேலும் கதறினேன்.

"ஆம்! இதுதான் உலகம். இதில் ஏமாற்றம் அடைவதற்கு ஒன்றுமில்லை. என் அனுபவத்தில் இவ்வுலகில் நல்லது, அன்புள்ளது, கருணை உள்ளது என்று ஒன்றுமே கிடையாது. எல்லாம் சந்தர்ப்பத்திற்கேற்ற நடிப்புத்தான். நிலமை தப்பி சக்தியை இழந்துவிட்டால், பின்......என் நிலமை தான் ..." என்று கூறியபடியே, கண்களைத்திரும்பவும் மூடியது.

அவ்வளவுடன், என் கைகளிலிருந்து நழுவித் திரும்பவும் கருஞ்சேற்று மண்ணில் விழுந்தது. ஆனால் இப்போது யார்தான் என்ன செய்துவிடமுடியும், இக்கொடிய உலகிலிருந்து விடுதலை பெற்ற அவ்வல்லி மலரை.....!

*("சங்கு வெண்தாமரைக்குத் தந்தை தாய் இரவி தண்ணீர்" என்ற பாட்டிலுள்ள கற்பனையைத் தழுவி எழுதியது.)*

**தினகரன்**
**23.7.1950**



# உறுதி

தடார் என்று பனைமரம் வீழ்ந்தது. அது விழவில்லை; வீழ்த்தப்பட்டது.

இதிலென்ன புதுமை? ஒவ்வொரு நாளும்தானே பனைகள் வீழ்த்தப்படுகின் றன?

இருந்தும் ஏதோ ஒன்றை மனம் உணர்த்திக்கொண்டே இருந்தது.

''வெறும் சோத்தி'' என ஒருவன் கூறி யது கேட்டது.

''அவ்வளவும் வைரம்'' என்ற பாட்டி யின் முனகலும் தூரத்தே ஒலித்தது.

மனம் கூறியது விளங்கவில்லை. அவை பனையைப் பற்றிய ஏதேதோ வார்த்தைகள்.

பனை வீழ்ந்து விட்டது. பிறருக்குப் பயன் தந்த வாழ்வு. பச்சை ஓலைகள், குலை குலையாக நுங்கு, பின்னர் பனம் பழம் ...... பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று. காலமும் ஓடிக்கொண்டிருந்தது.

எஞ்சிய காவோலை மட்டைகள்.

கருகிய வேலிகள், அழிந்த வீடுகள்.

பிரிந்த உயிர்கள்.

பனம்பழத்திற்குப் பதில் விமானத்திலிருந்து வீசப்படும் குண்டுகள்.

பதுங்கு குழிகள்.

''ஹெலி வருகுது.''



''இல்லை பொம்பர்'', தாயைக் குழந்தை திருத்துகிறது.

சத்தம் பயங்கரம் கொள்கிறது.

''வங்கருக்குப் போவோம்.''


பழக்கப்பட்ட அச்சுறுத்தல் எம்மைப் பதுங்கு குழியில் சேர்க்கிறது. எங்கும் மரணத்தின் எதிர்பார்ப்பு. இருள், அமுக்கம்; எனினும் மண் தரும் தஞ்சம் ஆறுதல் தருகிறது. பதுங்கு குழியுள் இருக்கிறோம்.

நிமிர்ந்து எழுந்த போது மண்டையைப் பிளக்கும் அடி! இருளின் நடுவே பலத்த சிரிப்பொலி! ''நாம் சாவதில்லை'' என்ற எக்காளம்!

அடிபட்ட தலையை உயர்த்திப் பார்த்த போது சில துண்டங்கள் தெரிந்தன அவை பதுங்கு குழியை மறைக்கும் மேற்பாகம்.

உற்றுப் பார்க்கிறேன். அவை மெல்லிய பலகைகள் அல்ல. அவை பனம் குத்திகள். இல்லை. அதே பனை! வீழ்ந்த அதே பனை! உறுதியோடு எம் உயிர் காத்து நிற்கிறது.

சிரித்திரன்
தை - மாசி, 1991



# பொங்கல்

**பொ**ங்கல் திருநாள்!

அந்தப் புதுநாள் உதித்துப் பலரையும் மகிழ்வித்து இப்போது பிற்பகல் என்ற வடிவை எடுக்கும் வேளை இடம், கொழும்பு தட்டார் தெரு. இன்றைய பெயரின்படி ஸ்ரீமத் பண்டாரநாயக்க மாவத்தை. அங்குள்ள முருகன் கோவிலின் வாயிலருகே பல்வகைப் பொங்கல் சாதங்களும் கூடிக் கதைக்கின்றன.

பிச்சைக்காரப் பெண்மணி ஒருவரின் பொட்டணத்துணி குளிர்ந்த சிறுமண்டபம் போல இடமளிக்க, உள்ளே கதை நடை பெறுகிறது.

"உயிர்கள் வயிறார உண்டு மகிழ்வதை மனதாரக் கண்டேன். அதில் எத்தனை இன்பம்! குழந்தைகள் உண்டு களித்து விளையாடின. தாய்மார் ஈந்தீந்து மகிழ்ந்தனர். பெரியோர் பார்த்து பூரித்து நின்றனர்." குடியானவனது பொங்கல் இவ்விதம் கூறிக்கொண்டிருந்தது.

"அத்தோடு ஒரே நாளில், ஒத்த உணர்வோடு, மக்கள் ஒருமித்து மகிழ்

வது சிறப்பல்லவா? வீடல்ல, ஊரும் இனமும் இன்று ஒன்று சேர்ந்து மகிழ்ந்தன. ஆக்கம், நிறைவு, அன்பு, அத்தோடு ஈகை, அனைத்தும் இறைவனுக்கே என்ற அருள் தோய்ந்த பாவனை இத்தினத்தைத் திருநாளாக்கி நின்றது!'' என மகிழ்வூறக் கூறிற்று அங்கிருந்த கோவிற் பொங்கல்.

''அத்தோடு எவ்வளவு சுதந்திர உணர்வு! அகன்ற வெளிமுற்றத்திலே, ஆகாயத்தைப் பார்த்தவண்ணம், வெடியொலியும் மகிழ்வொலியும் கொட்டப் பொங்கி மகிழ்வதிலுள்ள இன்பம் கொஞ்சமா?'' பயறு கமழ்ந்த வெண்பொங்கலொன்று இவ்விதம் பூரித்தது!

''உங்கள் அனுபவம் என்ன?'' தேன் கலந்த பெரிய இடத்துப் பொங்கலைப் பார்த்து இவை கேட்டன.

அது ஏதோ முணுமுணுத்தது. பின்னர் கூறிற்று —

''நீங்கள் எதையெதையோ சொன்னீர்கள்; கேட்டேன். எனது அனுபவமோ வேறு. பலரின் மத்தியில் தாம் மட்டும் தமிழரென வெளியில் வைத்துப் பொங்குவதென்பது அந்தப் பெரிய வீட்டாரின் கருத்துப்படி சரியல்லவாம்; அழகல்லவாம்! எனவே நான் உட்குசினி அடுப்பில் வைத்துப் பொங்கப்பட்டேன்! பின்பு வெளியில் அல்ல, உள்ளே சுவாமி அறையின் படத்தின் முன் வைத்துப் படைக்கப்பட்டேன். எனக்கு நெய்யும் தேனும் ஊற்றினர். ஆனால் அத்தோடு தம் அடிமை உணர்வையுமன்றோ ஊட்ட முனைந்தனர்?''

''எனினும் நீ பொங்கினாய் தானே?''

''இல்லை, நான் அவமானத்தால் வெந்துகொண்டிருந்தேன். அந்த அடிமைகளைப் பார்த்து வெதும்பிக்கொண்டிருந்தேன்.''

''அப்படியானால்... ?''

''பொங்கல் என்பது உள்ளத்தின் ஏற்றம். பொங்கல் என்பது பூரிப்பு. பொங்கல் என்பது பூரண சுதந்திரம். பொலிவும் நிறைவும் மகிழ்வும் அதிலன்றோ?''

நெஞ்சத்தின் அடிவாரத்திலிருந்து வந்த இவ்வார்த்தையைக் கேட்டு அனைத்தும் அசையாது நின்றன.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.



# சேவையின் அடியில்

கூட்டம் நடந்துகொண்டிருந்தது.

கூட்டம் கூட்டமாகக் கூட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.

மனிதர்கள் கூடிக் கதைப்பதுதான் கூட்டம் என்பதல்ல! பூக்கள் சிலிர்த்து நிற்பதும் இனிய ஒரு கூட்டக் காட்சி தானே?

வெறும் பச்சை அணிந்து இலையோடு இலையாகப் பிஞ்சும் காயும் மரத்தில் மறைந்து இருப்பதும் ஓர் உயரிய கூட்டத்தின் காட்சிதான்!

வரிசையாய்ப் பறந்து வானத்தில் வலம்வரும் கொக்கும் குருவிகளும் கூட்டமாய் அல்லாது, வேறெவ்விதம் செல்கின்றன?

தேனீக் கூட்டம்.....

முயலும் மானும் இனமினமான கூட்டம்.....

யானைகள்கூட தனியனாய் அல்லாது கூட்டமாய் வாழ்ந்தே முழுமை பெறுகின்றன!

மனிதப் பிராணிகளும் கூட்டமாய் வாழும்; இடையிற் சண்டை பிடிக்கும். பின்னர் எவ்விதமோ சேர்ந்துவிடும்! இவைகள் வீடுகளைக் கட்டி நகரமாய் ஆக்குவது மட்டுமல்ல, தம் ஏடுகளையும் பாடல்களையும்கூடக் கூட்டித் தொகுப்பாகக் காப்பதுண்டு!



இணைந்தும் சேர்ந்தும் கூட்டாக வாழ்வதிற்றானே வலிமை – இனிமை – பயன் எல்லாம் கைகூடுகின்றன.

இதில் என்ன புதுமை?

இங்கு —

இடம் எதுவெனில், கோவில் அல்ல; கோவிற் காணியின் புறத்தேயுள்ள ஒரு சாதாரணக் குப்பை மேடு.

அங்குதான் அந்த உயர்வு...... உயிர் கொண்டு பேசிற்று. இறையருள் எங்கும் உண்டு என்ற உண்மையை உணர்த்திற்று. வீழ்ந்தது காலைக் கதிரா அல்லது மாலை வெயிலா என்பது நினைவிலில்லை. இவை அங்கு பெரிதல்ல.

கீழே பார்த்தேன்.

குப்பையும் கூளமும் கிடந்தன. சருகுகள் கிடந்தன. சருகாகிவிட்ட மலர்களும் கிடந்தன. அந்த இலை குழை மலர்ச் சருகுகளின் நடுவே அதுவும் இருந்தது.

அதனை அறியாது காலால் அதனைத் தட்டினேன் கல்லாக இருந்த என் மனத்துள் உயிர் பெற்றதைப் போன்ற உணர்வு எழுந்தது.

"ஆமாம், நீ நினைத்ததுபோல கூட்டு வாழ்க்கைதான் உயர்வானது! பிளவின் போது நலிவு பிறக்கிறது; இணைந்து சேர்வதில் வலிமை பிறக்கிறது. வெற்றியின் பயனும், இனிமையின் சுகமும் உதிப்பது

இங்குதான்...... இதோ பார்'' என்றது ஒரு மென் குரல்.

பார்த்தேன்.

அந்தக் குப்பைமேட்டில் ஒரு மாலை தெரிந்தது. இறைவனுக்கு அர்ப்பணிக்கப் பட்ட ஒரு வண்ண மலர்மாலை காய்ந்து உதிரும் நிலையில் தெரிந்தது.

''பார்த்தாயல்லவா? மலர்கள் எங்கெல்லாமோ பூக்கின்றன. அவற்றை ஒன்றாக இணைத்து மலர்மாலை ஆக்கும்போது தான் மனிதனுக்கு நிம்மதி பிறக்கின்றது.''

''அதுவும் ஒரு கூட்டுமுயற்சி தானே?'' என்றேன்.

'' ஆனால் சிதறுண்ட பொருள்களை பின்னணியாய் நின்று கூட்டி இணைப்ப தற்கு ஓர் உயிர்நாடி தேவை. ஏனையன தம்மை வெளிக்காட்டலாம். ஆனால் சேவையின் அடியில் இது கூடவே கூடாது'' என்றது.


விளங்காது மீண்டும் வானைப் பார்த் தேன். மலர்மாலை தெரியவில்லை. குனிந்த போது மலர்களை முன்பு மாலையாய் இணைத்து நின்ற காய்ந்த வாழைநார் தனித்துத் தெரிந்தது- அது தாயின் எலும்பு போல் காட்சி தந்தது.

'' மலர்களுடன் நீங்கள் சுவர்க்கம் போகவில்லையா? '' என்றேன்.

விடை வந்தது —

'' ஏன், நாம் இப்போது இருப்பதும் சுவர்க்கம்தானே?''

புதிய உலகம்
தை - ஆனி 1988



16

# வெறுமை

அன்று வெள்ளிக்கிழமை. மறுதினம் ஓய்வு நாள் என்பதனாலோ என்னவோ அந்த அலுவலகம் ஒரே சந்தடிப்பட்டுக் கொண்டிருந்தது.

அலுவலகங்களில் – மக்கள் உப பாத்திரங்கள்; கடிதங்களும் காகிதங்களும்தான் கதாபாத்திரங்கள்! சில இடங்களில் முக்கிய எஜமானர்கள் என்றுகூடச் சொல்லலாம்!

'அனுமதியின்றி உட்செல்லக் கூடாது' என்ற காகித அட்டையைப் பார்த்துவிட்டு மக்கள் வெளியில் நிற்பார்கள்!

இறக்குமதி அனுமதிப்பத்திரம் தன் காலை எடுத்து மொத்த வியாபாரியின் கைக்கு வந்ததும் அவனது உள்ளம் துள்ளிக் குதிக்கும்!

'உனது வேலை ரத்தாகிவிட்டது' என்ற கடிதம் வெளிக்கிடுமேல் அதன் முன் ஊழியன் கதிகலங்கி நிற்பது இயல்பு.

கணக்கு வழக்குப் பத்திரங்கள் இன்னொருபுறம். இவ்விதம் பல. இவைதான் அந்த அலுவலகத்தின் ஆட்சியாளர்கள்.

இவ்விதம் அந்த வேலை நாள் கழிந்தது. மறுநாள் ஓய்வுநாள்.

எனவேதான் ஓடாத மின்விசிறிகளும் வெளித்த மேசை வரிசைகளும் கண்ணுக்குத் தெரிகின்றன. அங்கு கதிரையின் காலடியில் ஒரு குப்பைக் கூடை.

கிழித்தும் கசக்கியும் தள்ளப்பட்ட காகிதங்களே அக்குப்பைக் கூடைக்குள் திணிபட்டுக் கிடக்கின்றன. எரிந்து நூர்ந்த நெருப்புக் குச்சிகளும், சில கடலைக் கோதுகளும் கூடைக்குள் சேர்ந்துள்ள கூட்டாளிகள். ஒரு அமுக்க சமநிலை மேலே சுவர்க்கடிகாரம் மட்டும் தன் கடமையைப் புரிகிறது.

மறு நாள் வேலை நாள். இந்த ஓய்வு நாளில் வந்த பணியாளனின் கரம் குப்பைக் கூடையைத் தூக்குகிறது. கூடை கட்டடத்தின் ஒதுக்குப் புறத்தில் வைக்கப்பட்டது. அங்கு மேலும் சில கூடைகளும் துடைப்பங்களும் கிடந்தன.

எந்த உயிரும் முற்றாகச் செத்து விடுவதில்லை. ஒவ்வொன்றும் ஏதோ ஒரு நிலையில் உயிர் வாழ்கின்றது. அங்கும் அப்படித்தான்.

கூடையைக் கொண்டு வந்தவன் அதனுள் கையை விட்டு காகிதம் சிலவற்றை வெளியிற் போட்டான். பின்னர் கூடையைக் கவிழ்த்து தரையில் ஒரு குத்து! காகிதம் அவ்வளவும் கீழே வீழ்ந்தன. எனினும் ஓர் அசையாநிலையில் அவை இருந்தன. ஒரு சத்தமும் அங்கில்லை.

வினாடிகள் சில கழிந்தன. ஒரு முனகல் எழுந்தது. அது ஓலமாய் வளர்ந்தது.

எல்லாக் காகிதங்களும் சும்மா இருந்தன; அந்த ஒன்று மட்டும் நெஞ்சத்தால் ஓலமிட்டு அழுதது.

''ஏன் அழுகிறாய்?''

''ஐயோ! என் முடிவு வந்து விட்டது!''

''ஏனைய காகிதங்களுக்கும்தானே? அவை அழவில்லையே?''

''அவை எழுதியோ கிறுக்கியோ வாழ்ந்து விட்டன.''

''நீ?''

''நான் வெறும் வெள்ளைக் காகிதமாக இருந்து விட்டேன்; வாழ்வில் எதுவும் செய்யாது இருந்து விட்டேன். நான் மகிழ்வோடு இருக்க முடியுமா?''

என் நெஞ்சம் துணுக்குற்றது!

சஞ்சீவி *22. 2 .1986*



# முட்டைத் தத்துவம்

அது கிராமத்தின் தெருவோரத்திலுள்ள ஒரு கோழிப்பண்ணை. அங்கு வந்து போவோர் பலர்; கோழிகள் ஏராளம்; முட்டைகளும் பெருந்தொகை!

அந்த முட்டைகளுள் சில தம்மிடையே நன்றாகக் கதைத்துக்கொள்ளும். ஆனால் அவற்றின் கதை வெளிக்குத் தெரியாது; எவருக்கும் கேட்காது. அத்தகைய உள்ளுணர்வுடன்கூடிய அந்தரங்கப் பேச்சு அது!

அதில், மனிதக் கை பட்ட அந்த முட்டையொன்றுக்கு தன்னை மறந்த பெருமை! பெரிய இடத்துத் தொடர்பு தனக்குக் கிடைக்கும்; எங்கேனும் போய் பெரிய ''கேக்'' ஆக இருப்போம் என்ற பெருமையில் அது மிதந்துகொண்டிருந்தது!

''இவ்வளவு காசுக்கு வாங்கப்பட்டு, இவ்வளவுக்கு விற்கப்பட்டு, எவ்விதமேனும் இவ்வளவு இலாபத்தைத் தேடிவிட்டே போக வேண்டும்.'' இது இன்னொரு முட்டையின் இலட்சியம்!

''கலங்காமல் இந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருப்போம். காசானால்

என்ன? கறியானால் என்ன?'' இவ்விதம் அழகாக உட்கார்ந்து இருந்தது இன்னொன்று.

''அது என்னவாம்?''

ஏகமனதாகக் கேட்டன அத்தனை முட்டைகளும். பின்பக்கத்து அறையொன்றில் இருந்த முட்டையைப் பற்றித்தான் அவை ஆராய்ந்தன.

''முட்டையா அது?''

''பிறந்து எட்டு நாளாகிவிட்டது. இன்னும் அங்கு அழுக்குப்படக் கிடக்கிறது.''

''தாயின் இருளிலே மறைந்து கிடக்கிறது.''

''அது மட்டுமா? உள்ளே கலங்கிக் கொண்டும் இருக்கிறது.''

''இவ்விதம் உள்ளே கலங்கிப் பயன் என்னவாம்?''

''உடைவதுதான் பயன்!'' – எல்லா முட்டைகளும் ஏகப்படச் சிரித்தன!

நிழல் – ஒளித் திரையிலே நாட்கள் விரைந்து ஓடின.

இரண்டொரு நாள் செல்லுமுன் பெரிய மோட்டார் காரில் சென்று, பெரிய ''கேக்'' ஆகிற்று ஒரு முட்டை.

இன்னும் இரண்டு நாட்களுள் விரும்பிய இலாபத்தை உழைத்துவிட்டு மறைந்தது வேறொன்று.

கலைஞனின் தூரிகை பட்டு ஒரு வண்ண அலங்காரக் கோதாகி ஒரு வீட்டில் நின்றது மற்றொன்று.

மேலும் நாட்கள் ஓடின; ஓடி விட்டன.


இப்போது அந்த அடை முட்டை?

அது தன்னுள் உருமாறி, உடைந்த பழம் கோதாகி குப்பை மேட்டில் கிடக்கிறது.

ஆனால் அது உலகுக்கு அளித்த இளம் சேவற் குஞ்சொன்று நெஞ்சை நிமிர்த்திக் குரல் கொடுத்துக் கூவத் தொடங்குகிறது!

''நாம் வாழ்வோம்! எம் இனம் வாழும்!'' என்ற கீதம் அதன் குரலிலே எழுந்து, பரந்து மிதக்கிறது.

சுடர்
ஐப்பசி 1976




# செயல் வரிசை

"என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்?" ஆந்தை அக்கா இவ்விதம் கேட்டாள்.

"ஒன்றுமில்லை அக்கா. என்னுள் யோசித்தேன். நெஞ்சு வலிக்கிறது. நின்று விடும் போலிருக்கிறது. நான் சாகப் போகிறேன்."

"மடைப்பயல்!"

ஆந்தை அக்கா இப்படித்தான் ஏசினாள். அதில் கனிவு இருந்தது. அன்பு ஆதரவு எல்லாம் இருந்தன.

அக்காவே தொடர்ந்தும் கூறினாள் –

"அவர் யோசித்தாராம், சாகப் போகிறாராம்! நல்ல யோசனை! அப்படி என்ன நடந்துவிட்டது உனக்கு?... ம்!"

எல்லோரும் மதிப்போடு பார்க்கும் அந்தப் பெரிய சுவர்க் கடிகாரம் இப்போது ஆந்தை அக்காவின் தம்பிபோல காட்சியளித்தது.

நேரம் நடுச்சாமம்.

உயரிய மெழுகுவர்த்தி ஒன்று மெலிதாக எரிந்துகொண்டிருந்தது. எனினும்

அந்தப் பழைய மாளிகை போன்ற வீட்டின் வெளிப்புறமெங்கும் இருள் கவிந்து, ஒருவகைப் பார உணர்வையே பரப்பிக் கொண்டிருந்தது.

அன்போடு ஏசிய அக்காவுக்கு இது பழைய பாடம். இருட்டில் இருக்கும்போது தான் ஆந்தை அக்காவுக்குப் புத்தி சுயமாக ஒளிவிடும். அவள் கண்ணை சிறிது விழித்து மூடினாள்.

சுவர்க் கடிகாரத்திற்கு வயது நாற்பதிற்கு மேலிருக்கும். ஆயினும் கடிகாரம் தம்பிதான். வயதிற் குறைந்தபோதிலும் ஆந்தை அக்காதான்! இது தாய்க்குலத்திற்குரிய தனிப்பண்பு.

''என்னுள் யோசித்தேன் அக்கா.கணக்கிட்டு கூட்டிப் பார்த்தேன். அதை –''

''எதைக் கூட்டிப் பார்த்தாய்?''

மணிக்கூட்டின் டிக் டிக் சத்தம் இப்போ படபடப்போடு கேட்டது.

''என் இதயத் துடிப்பைத்தான் கணக்கிட்டுப் பார்த்தேன். டிக் டிக் டிக் என அறுபது வினாடி ஒலித்தால்தான் ஒரு நிமிடம் கழிகிறது.''

''ஆமாம்?''

''அப்படி அறுபது நிமிடம் அல்லது ஒரு மணி நேரம் கழிய எத்தனை முறை ஒலிக்கவேண்டும்?''

ஆந்தை அக்கா உடன் பதில் சொன்னாள்.

''அறுபதை அறுபதால் பெருக்க...... 3, 600.''

''அப்படியானால் நாள் ஒன்றுக்கு?''

''இருபத்து நாலால் பெருக்க...... 86,400. இத்தனை வினாடி கொண்டது ஒரு நாள்.''

''மாதம் ஒன்றுக்கு?'' ஆந்தை அக்காவின் கணிதமூளை மின்வேகத்தில் வேலை செய்தது.

''இதென்ன பெரிதா? முப்பதால் பெருக்க...... 25, 92, 000 வருகிறது.''

''ஐயோ'' என்றது மணிக்கூடு.

''என்ன!''

''இப்படி அடிக்க என்னால் இனி இயலாது! நெஞ்சம் நோகிறது! என்னால் முடியாது!''

அந்த நடுச்சாம நேரம் மேலும் பார முற்று நின்றது. ஆனால் ஆந்தை அக்காவின் உதடு மெல்லெனச் சிரித்தது. அவள் இலேசாகச் சிறகடித்து ஓரடி உயர எழுந்தாள். பின்னர் தம்பியின் எதிரேயுள்ள தளபாடத் தட்டொன்றில் ஊன்றி அமர்ந்தாள்.

''தம்பி! உனக்கு எப்படி இந்தப் புத்தி பேதலித்தது?''

''ஏன்? உண்மையில் ஒரு மாதம் வாழ என் இதயம் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேல் டிக் டிக் என அடிக்க வேண்டி உள்ளதே! இவ்விதம் அடிக்க என்னால் முடியவே முடியாது! நான் சாக வேண்டியதுதான்.''

''மடையா!'' எனத் தொடங்கினாள் அக்கா.

''உன்னை அப்படி எவரும் அடிக்கச் சொல்லவில்லை. நீ சுகமாக, இதமாக வாழலாம்!''

''எப்படி?''

''உன்னால் நோவில்லாமல் ஒரு முறை அடிக்க முடியுமல்லவா?''



''ஆமாம்.''

''அவ்விதம் ஒரு நேரத்தில் நீ ஒரு தரம் மட்டும் அடி; அது போதும்!''

''அக்கா, நீங்கள் எதைக் கூறுகிறீர்கள்?''

'' ஓர் உண்மையை உனக்குக் கூறுகிறேன். நூறு, ஆயிரம் என உன் வருங்கால வேலைகளைக் கூட்டி எண்ணி ஏங்காதே! ஒரு நேரத்தில் ஒன்றை மட்டும் செய். நீ ஒவ்வொரு தரமாக அடி. அது போதும்.''


ஆந்தை அக்கா அவ்வளவோடு பறந்து போய்விட்டாள்!

மணிக்கூடும் இப்போ மனப்பாரம் இன்றி இயங்குகிறது.

*(சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர், ஒரு பழைய ஆங்கில பாடப்புத்தகத்தில் படித்த சிறுகதையே இதற்கு மூலம்.)*

சஞ்சீவி

*28.3.1987*



# பூவாய் மலர்ந்த புழு!

மொட்டிலிருந்து வெடித்துப் பறக்கும் ஒன்றல்ல – வண்ணப்பூச்சி.

அது முன்னர் ஒரு புழுதான். அதுவும் சாதாரண புழுவா? இல்லை. விஷ மயிர் நிறைந்த மயிர்க்கொட்டிப் புழு! குழந்தைகளுக்கு அதைக் கண்டாலே பயம். பெரியோர்களுக்கு அதன் நினைவிலே உடம்பு சுணைக்கும்.

அதற்காக புழு விரக்தியடையவில்லை; வாழ்க்கையை வெறுக்கவில்லை. அது வாழ்ந்து வந்தது.

நாட்கள் ஓடின.

மாற்றாரின் வெறுப்பும் குறையவில்லை; கூடியே வந்தது. இருந்தும் புழு வாழ்ந்து வந்தது. எனினும் முன்போல அல்ல, இப்போது அதற்குப் பசி; அகோரப் பசி!

ஒரு இலையை அல்ல கிளையை அல்ல முழுமுழுச் செடிகளையே அது விழுங்கி

விடுவதுண்டு - அதையிட்டும் ஏனையவற்றுக்கு ஏளனம்தான். பொழுதைத் திரிந்தும் பறந்தும் போக்காததையிட்டு!

இருந்தும் புழு தன் நெறி தவறவில்லை. உண்டு உண்டு விரைந்து வளர்ந்து வந்தது. இப்போதோ அதன் உடலே அதற்குப் பாரம் போலிருந்தது. "பெரிதாய்" இருக்கவேண்டுமென்றால் உலகுக்குப் பாரமாய் இருக்கவேண்டும் என்பதா? அதற்குப் பிடிக்கவே இல்லை! வெறுப்பு ஏற்பட்டது. பிறர் மீதல்ல, தன் வாழ்வின் மீது! நாட்கள் ஓடின.



அன்று உண்ணவுமில்லை ஓரிடமும் ஊரவுமில்லை; சோம்பலோ வெறுப்போ தெரியவுமில்லை. "வேண்டாம்" என்ற மனநிலை. பின்னர் உறக்கம். உறக்கமா அது? உள்ளே துடிப்பு. வெளியே அமுக்கம், அழற்சி, ஒரே அழற்சி! துடித்தல். பதறித் துடித்தது உடல் உணர்வு எல்லாமே!

பின்னர் இரவு வந்தது. இருள் கவிந்தது. மீண்டும் காலையானதும் காற்று வீசியபோது, அது காட்டிய திசைக்கேற்பச் சருகுகள் உருண்டோடின, முந்தி அடித்துக்கொண்டு.

ஆனால் புழுவோ அதைக் காணவே இல்லை. அதற்காகப் பிறர் கவலைப்பட்டதும் இல்லை.

இல்லையா? இல்லை. புழு இருந்தது - பழையதொரு மர வேர்ப்பட்டையின் இடையிலே அது இருந்தது. ஆனால் பழைய பசி கொண்ட மயிர்க்கொட்டியாயல்ல. ஓரிரு மயிரையல்ல, முழு மயிரையும் மயிர் போர்த்த தோலையுமே கழற்றி விட்ட புழு அது! மௌனப் புழு!

ஒன்றுடனும் தொடர்பதற்கிருக்கவில்லை. தான் இட்ட குகையின் உள்ளே மௌனமாய் இருந்தது. ஒளியுட் தோய்ந்த வண்ணம் அந்த இருட்குகையின் நடுவே அது இருந்தது. ஒரு யுகமே இருந்ததெனலாம்.

ஏளனம் செய்வதற்குக்கூட உலகம் அப்புழுவை எடுத்துக்கொள்ளவில்லை.

ஒருநாள்......


தென்றல் தவழ, இலைகள் இசை பரப்ப, மலர்கள் முகம் காட்ட, அவ்வேளையில் –

இடியின் ஓசை எங்கிருந்தோ எழுந்தது. பார்த்தபோது, பாயும் மின்னலல்ல, வண்ணப்பூச்சியொன்று மிதந்து வந்துகொண்டிருந்தது! அதன் அழகைப்பார்த்து உலகம் வியந்தது! மலர்கள் தலைதூக்கி நோக்கின. நோக்கிய வண்ணம் நின்றன; எழுந்திட அவற்றால் இயலவில்லை.

மனிதனும் பார்த்தான் "எங்கிருந்து வந்தாய் நீ, இனிய மலர் இதழே!" என ஏதோ கவிதை புனைந்து கொண்டிருந்தான்.

அதுவோ, மேலே மேலே பறந்து கொண்டிருந்தது!

வீரகேசரி
*31.7.1961*



# பொய்யனார் புதுமை!



விசேட மின் அமுக்கியை அழுத்திய தும் அங்கு இருள் சூழ்ந்துகொண்டது. எங் கும் கறுத்த தடித்த இருள்!

இது விளக்கை ஏற்றியதும் வெளிச்சம் வரும் மண்ணுலகு அல்ல! இது அதற்குப் புறம்பானது. எனினும் அதனை ஆட்டிப் படைப்பது இதுதான்!

மண்ணுலகில் மனிதர் வெறும் பொம் மைகள்! சடலங்கள்! குணம் என்ற உந்து சக்தி புகுந்தால்தான் அவை ஆடும், அசை யும்; ஆயிரமாயிரம் செய்யும்! இந்தக் குணங் களும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உருவோ வடிவோ எடுக்க வல்லவை! இப்போது அசல் மனித வடிவம் எடுத்திருக்கின்றன!

எதற்காக?

தம்முள் ஒரு முக்கிய கூட்டத்தை நடாத்துவதற்காக. என்ன கூட்டமென் றால் இது ஓர் அரசியல் அந்தரங்க ஆலோசனைக் கூட்டம். இந்தக் குணங்களுக்குள்ளும்

எத்தனையோ குழுக்கள்! அந்த வகையில் இங்கு நடைபெறுவது கயமைக் கட்சியின் கூட்டம்! முன்னொருகால் விலங்குக் கட்சி மனிதரை ஆண்டது. இன்றோ கயமைக் கட்சியே ஆள்கிறது! எனவே இது ஒரு முக்கிய கூட்டம். இது அதன் தலைமைப் பதவித் தெரிவுக்கூட்டம்!

பங்குபற்றுவோர் ஒருசிலர் மட்டுமே. சத்தம் அடியோடு அடங்கிய நிலையில் கூட்டம் ஆரம்பமாகிறது. திருவாளர் "பொய்யனார்" இளமை குலையாத முதிய வடிவம் பூண்டு தலைமை வகிக்கிறார்!

"சரி, சொல்லுங்கள்" என்கிறார்!

அங்கிருந்த களவு, கொடுமை, பயம், பாரபட்சம் என யாவும் ஒன்றின் முகத்தை ஒன்று பார்த்தன!

"உங்கள் கருத்தைச் சொல்லலாம்" – சிறிது கண்டிப்பான குரலில் மூத்தவர் மீண்டும் கூறினார்.

"மக்களின் மனத்தை அறிந்து நாங்கள் சொல்லுவது......"

"மக்களின் கருத்தா? நாங்கள் நினைப்பதுதான் மக்களின் விருப்பாக வேண்டும். இதுதான் ஆட்சிமுறை. விளங்கவில்லை?" தலைவர் அர்த்தமுள்ள புன்சிரிப்புடன் கேட்டார்.

"அவ்விதம்தான் நாங்களும் எண்ணுகிறோம். எனவே...... அதனால்தான்......"

"ம் ...?"

"தங்களையே மீண்டும் தலைவராக வைப்பது உத்தேசம்."

"அப்படியானால் ...?"

"இல்லை, அப்படியேதான் சுவாமி!"

தலைவர் பொய்யனார் புன்முறுவல் பூத்தார்! அடுத்தது உபதலைவர் பதவி. அதற்கு யாரைத் தெரிவுசெய்வது?

ஒன்றை ஒன்று பார்த்தன. ஆசை அடக்கமாகச் சிரித்தது; பின்னர் அருகிலிருந்த களவுடன் காதோடு காது வைத்துக் கதைத்தது.

''சொல்லலாம்!'' - தலைவரின் அழுத்தமான வார்த்தை இது!

களவு எழுந்தது.

''எங்களை திருவாளர் பணம் அவர்களும் ஊக்குவிக்கிறார்கள். அதி உத்தம தங்களுக்கு அடுத்ததாக உப தலைவர் பதவிக்கு திருவாளர் பணம் இருப்பது பொருந்தும்.''

கபடம் இதனை ஆமோதிக்க, தெரிவு ஏகமனதாக நிறைவேறியது.

''அடுத்தது மிக முக்கியமான செயலாளர் பதவி. இதற்குரியவர் யார்?''



தலையைக் குனிந்தபடி யாவும் பேசாதிருந்தன. வெளியிற் கேட்காத வேகத்துடன் ஒவ்வொன்றின் நெஞ்சமும் அடித்துக் கொண்டது. மௌனம் நீடித்ததால் தலைவரே பேசினார்.

''சரி, இதை நானே சொல்லுகிறேன். நாங்கள் என்றும் ஆட்சியிலிருக்க வேண்டுமானால், நீதிக்கும் நேர்மைக்கும் இடம் கொடுத்தே ஆள்கிறோம் என்றிருக்க வேண்டும். எனவே திருவாளர் உண்மை அவர்களை எமது செயலாளர் பதவிக்கு நியமிக்கிறேன்.''

ஏகோபித்த ஏக்க ஒலி எழுந்தது.

''அவர் இங்கு இல்லையே?''

''அவர் எம்முடன் சேர வரமாட்டாரே?''

தலைவர் அதற்கு ஆறுதலான முடிவுரை பகர்ந்தார்.

“எனவேதான் கூறுகிறேன், ஆட்சியை நாங்களே வைத்திருப்போம்; நானே நடாத்துவேன். ஆனால் கவனமாகக் கேளுங்கள்—கேட்டுப்படியுங்கள் – வெளியுலகுக்கு உண்மையைப் போலக் காட்டித்தான் நாம் கீழ்மையைச் செய்வது சுலபம். எனவேதான், உண்மை என்ற பெயரையும் வெளித்தோற்றத்திற்காகப் போட்டு வைப்போம்; ஆனால் ஆட்சியை நாமே நடாத்துவோம்!”

“பொய்யனார் வாழ்க!” என்ற கர ஒலியின் நடுவே, தீர்மானம் நிறைவேறிற்று.

பொய்யனார் உண்மைக்கு இடம் கொடுத்த செய்தி மண்ணுலக மக்களிடையே பரவி, அவர்களுக்குப் புதுத்தென்பு ஊட்டிற்று.

‘மிலேச்ச மக்கள்!’ என, தன்னுள் புன்னகை புரிந்து கொண்டிருந்தார் தலைவர் பொய்யனார்!

சித்திரன்
வைகாசி 1987



# வீரம், மானம், ஓர்மம்!

**பே**னையைக் காணவில்லை.

அதற்குரிய மனிதன் எப்பவோ தூங்கி விட்டான். நள்ளிரவு வேளை. அவன் தூங்கிவிட்டான்; ஆனால் அவன் வைத்த இடத்தில் அந்தப் பேனை இல்லை.

அதற்குத் தூக்கம் இருக்காது. பசி, களை தெரியாது. சுகம் அறவே தோன் றாது. தேய்ந்து தேய்ந்து அது தன்னைத் தான் தீர்த்துக் கொள்கிறது. செயலில் தோய்ந்த அதன் வெற்றியைக் கொண் டாட அது அங்கு இருப்பதில்லை! செய லில் ஆழ்ந்த முடிவே அதன் வெற்றி.

பேனையைக் காணவில்லை. அது அங்கு அப்போது இல்லை. சிறகடித்து அடித்து அது எங்கெல்லாமோ சென்று கொண்டிருந்தது.

ஆய்ந்த வண்ணமும் வினாக்களை எழுப்பிய வண்ணமும் அது சென்றுகொண் டிருந்தது!

"தண்ணீரே, நீ ஏன் குளிர்மை நீங்கி நெருப்பாகக் காய்ந்துகொண்டிருக்கி றாய்?"

"எரிந்துகொண்டிருந்த அடுப்பருகே இருந்தேன். அதுதான் இந்தப் பயக் காய்ச் சல்" என்றது தண்ணீர்!

பேனா குறிப்பெடுத்துக் கொண்டது – "பயம் பொல்லாத நோய்."

மீண்டும் பேனாவின் சிறகடிப்பு. இருட் டுள் இருட்டாக வீழ்ந்த பனை தெரிந்தது.

"நீ ஏன் வீழ்ந்தாய்?"

"அந்தப் பொல்லாத கோடரி இடை விடாது வெட்டிக் கொண்டிருந்தது; நான் விழவேண்டியவனானேன்."

"இடையறா முயற்சியின் முன் எது வும் சாய்ந்திடவேண்டியதுதான்." குறித் துக்கொண்டது பேனா!

பாரக் கல்லொன்று தெரு ஓரத்தில் கிடந்து அழுதது.

"மனிதனின் ஐந்து விரல்களும் ஒன்று சேர்ந்தன; இரண்டு கைகளும் இணைந் தன; நான் தூக்கி வீசப்பட்டேன்."

"எதையும் அகற்ற வல்லது இலட்சிய ஒற்றுமை." இது பேனை எடுத்த மூன்றா வது குறிப்பு.

தூரத்தே போனபோது நட்சத்திரங் கள் சமீபித்தன. அங்கிருந்து பார்க்க பூமியைச் சந்திரன் சுற்றி வருவது தெரிந் தது.

"சக்தி குறைந்தவன் வலம் வந்து வீணாகிறான்; மற்றவன் ஆள்கிறான். சக் தியே பலம்."

இதனை நன்கு குறித்துக்கொண்டது பேனா! மீண்டும் பூமி. அங்கு –

தமிழீழம் தெரிந்தது. அந்தப் பொன்னான மண்ணில், வள்ளுவர் வகுத்த பொய்யா மொழி புத்துணர்வை – புது வாழ்வை–பரப்பிக் கொண்டிருந்தது. அன்பு, அறம் என்பதுடன் வீரம், மானம் என்ற அதிகாரங்களும் இயங்கத் தொடங்கியிருந்தன.

மாணவன் ஒருவன் படித்துக்கொண்டிருந்தான்.




''யானை பெரியது, பாரம் உடையது, பாரிய கூர்த் தந்தங்களைக் கொண்டது. எனினும் புலி சீறிப்பாய்ந்து தாக்கும்போது யானை வெகுண்டு விடுகிறது; தளர்ந்து விடுகின்றது'' என்ற அடிகளைப் படித்துக் கொண்டிருந்தான்.

வீரம், மானம், ஓர்மம் என அவனது இதயம் ஒலித்துக்கொண்டிருந்தது. எம் வெற்றி இதுவே என்பதில் அவன் தெளிந்து கொண்டிருந்தான்.

பேனையின் மை வற்றியிருந்தது. ஆனால் வெற்றியின் உறுதி அதில் தெரிந்து கொண்டிருந்தது!

**விடுதலைப் புலிகள்**
***மார்கழி 1990***



# முளைகள்

மொட்டொன்று மலராகி நின்றது! தாயின் கைப்பிள்ளைபோல செடி நடுவே அது மலராகி நின்றது!

வண்ண நிறமா? நறுமணமா? இவற்றுக்கும் மேலான மென்மை மகிழ்வே அந்த மலரைச் சிறப்பித்து நின்றது!

"எதைப் பார்க்கிறாய்?"

"வானத்தை!"

ஆமாம், வானும் அதைப் பார்த்து நின்றது.

சிறிது நேரத்துள் வளைகாப்புக் கையொன்று மெல்லென மலரைக் கவர்ந்து சென்றது. பின்னர் ஒரு படத்தின் முன் வைக்கப்பட்டபோது அது அகமகிழ்ந்து அமர்ந்தது.

* * *

இன்னொரு மொட்டொன்று மலராகி நின்றது. அதற்கும் நிறம் இருந்தது எனினும் எவரும் அதை மதிக்கவில்லை. மறுநாள் கருகிய இதழ்கள் கீழே கிடந்தன!

நாட்கள் சில செல்ல பூ இருந்த இடத்தில் பிஞ்சொன்று தெரிந்தது.

வெயில் அதைக் காயாக வளர்த்தது.

நாட்கள் மேலும் சென்றபோது அது கனியாக நின்றது! நல்ல சிவந்த கனி!



வெயிலும் காற்றும் அதைத் தொட்டுச் சென்றன.

''வானையா பார்க்கிறாய்?''

பதில் இல்லை.

''நீ செல்ல இருப்பது?''

''மோட்சத்திற்கு!''

அதில் ஆழ்ந்த ஏளனம் கலந்திருந்தது; எனக்கு அதன் சாட்டையடி தெரிந்தது!

நாட்கள் சில கழிந்தன.

நான் மீண்டும் அவ்விடத்தே வந்தபோது செடியின் வெறும் காம்பு தெரிந்தது.

முன்பு கண்ட அந்த செந்நிறக்கனி?

''நான் என் சுவர்க்கத்துள் இருக்கிறேன்; தாய் மண்ணுள் இருக்கிறேன்.''

தரையின் கீழிலிருந்து இக்குரல் ஒலித்தது. விளங்கத் தயங்கிய என்னை அது விளங்க வைத்தது.


''என்னை நீ காண மாட்டாய். ஆனால் நான் வீழ்ந்த மண்ணின் புது வாழ்வைக் காண்பாய்!''

குரல் மேலும் ஒலித்தது –

''புதைந்த விதைகள் வீண்போவதில்லை.''

வரலாற்றின் அழியாத உண்மை அங்கு பளிச்சிட்டது!

சிரித்திரன்
*கார்த்திகை 1990*



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலகம்
யாழ்ப்பாணம்

# சிலுவை

299Hcc

எண்ணிப் பார்க்க இதயம் வெதும்பிற்று; ஆத்திரம் தழலாய் எரிந்தது!

"இரண்டு மரக்கட்டைகளின் இணைப்பு! அதற்கு இவ்வளவு மதிப்பா? அப்படி என்னதான் செய்துவிட்டதாம் அது? அதற்கு ஏன் இவ்வளவு பெருமை கொடுபட வேண்டும்?"

இந்த உணர்வு அங்குள்ள ஒரு உயிருக்கல்ல, மூன்று உயிர்களுக்குமே ஒன்றாய்ப் பற்றி எரிய அவை சேர்ந்திருந்து கதைத்தன.

அவை யார் யாரென்பதை அறிந்தால் அதிசயமாயிருக்கும். ஆனால் அங்கு அதிசயம் என்பதெல்லாம் சர்வ சாதாரணம். இழப்பிலே சுகத்தையும் மரிப்பிலே வாழ்வையும் கண்டு நின்ற இடம் அது.

ஆம்! அது ஒரு ஆலயம்.

அங்குள்ள அமைதி தழுவும் முன்றலின் ஒரு மூலையிலே, அந்த மூன்று பொருள்களும் ஒன்றுகூடி உரையாடின.

அவற்றுள் ஒன்று முள் - கூரிய பெரு முள்.

மற்றது, வல்லோரையும் நல்லோரையும் வருத்த வல்ல கசை; அதாவது சவுக்கு

அடுத்ததை எது என்பது? அந்தப் புனித தசையிலே ஏறி, திவ்விய இரத்தத்தைப் பீறிட்டு ஒழுகச் செய்த பெரிய இரும்பு ஆணியின் பரம்பரையில் வந்த, இன்னொரு பருத்த ஆணி அது!

இவை மூன்றும்தான் கதைத்துக் கொண்டிருந்தன.

"கிரீட வடிவமாய் அமைந்து இயேசு பெருமானின் சிரசைத் தொட்டு நின்றவன் நான். அன்னாரது உடலின் பல பாகங்களிலும் ஆழப்பதிந்து வந்தவன் நீ. அந்தத் தசையை ஊடுருவி இரத்தத்துள் தோய்ந்து நின்றவன் இவன். எம்மிலும் கூடிய சம்பந்தமா அந்த மரக்கட்டைச் சிலுவைக்குக் கிடைத்தது? அதற்கு ஏன் இவ்வளவு மகிமையும் உயர்வும் கொடுபட வேண்டும்" என ஆத்திரத்தோடு பேசிக் கொண்டு போயிற்று முள்.

"உண்மைதான்" எனத் தலை அசைத்தது கசை.

"ஆமாம்" என்று உறுமிற்று ஆணி!

"நாங்கள் இருக்க இடமற்று இங்கு வெளியில் கிடக்கிறோம். சிலுவையோ அங்கு ஆலயத்தின் உள்ளே மேடையில் இருக்கிறது."

"பலரும் பார்த்து வணங்க நிற்கிறது." வளரும் பொறாமை போல அவற்றின்

வார்த்தையும் வளர்ந்து கொண்டே போயின!

"ஏ சிலுவையே! நீயும் எம்மைப் போல் நின்ற ஒருவன்தானே? இருந்தும் மனித சமுதாயம் உன்னை மறக்க மறுப்பது ஏன்? அவ்வளவு பெருமைப் பொருளா நீ?" எனக் குரலெழுப்பின அவை!

குருசு தன் நெறியிலே பேசாது நின்றது.

திரும்பத் திரும்ப அவை குரலெழுப்பின; அத்தனைக்கும் குருசு அசையாது நின்றது. நூறல்ல ஆயிரம் தடவை அவை ஏசித் தூற்றின. அனைத்தையும் தாங்கிய வண்ணம் சிலுவையோ அசையாது நின்றது.

ஏசிய அவைக்குக் களைப்பு ஏற்பட்டது. தம் காழ்ப்பிலும் வெறுப்பிலும் அவை தோய்ந்து களைத்தன! அந்நிலையில் ஒரு யுகம் சென்றதைப் போலிருந்தது. மரணத் தறுவாயில் ஏற்படும் உணர்வுடன், இதயத்தின் அடிவாரத்திலிருந்து எழும் ஈனக் குரல்கொண்டு அவை கேட்டன.

"சிலுவையே, உன்னைத்தான் கேட்கிறோம். உன் பெருமைக்குக் காரணம் என்ன? கூறமாட்டாயா?"

சிலுவை சற்று அவர்களைப் பார்த்தது. பின்னர் அந்த இதயங்கள் கேட்க அது நெகிழ்வோடு கூறிற்று –

"எனக்குச் சொந்தப் பெருமை என ஒன்றும் இல்லை. ஆயினும் ஒரு தனி உணர்வை அனுபவிக்கும் பெரும் பாக்கியத்தை யான் பெற்றிருந்தேன். அதுவே என்னைக் காத்து வருகிறது."

"அது என்ன?" ஆவலோடு கேட்டன அவை.

சிலுவை பதில் சொல்லிற்று:

"இயேசுநாதருடன் சம்பந்தப்பட்டிருந்த போதிலும் நீங்கள் அந்தப் பிதா மகனின் துன்பத்தில் பங்குபற்றியது கிடையாது. எனக்கோ ......"

"சொல்லுங்கள்" என மன்றாடின அவை.



"எனக்கோ இயேசுநாதருடன் கூட இருந்தது மட்டுமல்ல, அந்த இரட்சகருடைய துன்பத்திலே பங்குபற்றும் பெருவாய்ப்பும் கிடைத்தது. அந்தத் திருமேனியிலே ஏறிய ஆணி என் மீதும்தான் ஆழமாய் ஏறி நின்றது. அந்த வேளையிலும் இரட்சகர் தம் துன்பத்தை மறந்து பிறருக்காகப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார். அவரைத் தாங்கிய வண்ணம், அந்த உணர்விலே ஒரு கணம் என்னால் ஒன்றிட முடிந்தது. என் பெருமைக்குக் காரணம் அவரே."

ஆணியும் கசையும் முள்ளும் இவ்வார்த்தையில் இளகி நின்றன. அவற்றின் புலன்களிலே ஒரு புனிதத் தன்மை பிறந்துகொண்டிருந்தது.

அவை அக் குருசைப் பார்த்தன. அதில் இயேசுநாதரின் திருவுருவம் அவற்றின் கண்ணுக்குக் காட்சியளித்தது!

புதிய உலகம்
*1977*

JAFFNA



# சாவின் சாவு!

"என்ன?"

வெறும் கேள்வியாய் இது எழவில்லை! ஆச்சரிய ஒலியாயும் விழவில்லை! அதட்டலாய் – ஆவேச முழக்கமாய் அதிர்ந்தது!

சாவின் அரசன் தன் கருங்கோலைக் கீழே இடித்து அதிர வைத்தபோது ஆர்த்த முழக்கமே இது!

சிம்மாசனம் பதறிற்று! எதிர் நின்ற ஏவற்கணங்கள் நடுங்கின! விழிகள் பிதுங்க அவை தம் நாவை அசைக்க முயன்றன!

"என்ன?"

மீண்டும் அதே ஆர்த்தல் முழக்கம்! கோபாக்கினியின் வீச்சு!

"உண்மைதான் அரசே" என்றன அவை, அடித்தளக் குரலில்!
"நான் சொன்னதைச் செய்தீர்களா?"

“செய்தோம்! ஆகாய விமானத்தின் வேகத்தைப் பெருக்கினோம்! பொழிந்தோம் நெருப்பை! பூமி புகை மண்டலம் ஆயிற்று. பச்சனவு யாவும் கருகின!”

“பிஞ்சுக் குழந்தைகளும் பாலூட்டும் தாய்மாரும் ஓலமிடும் முன்னரே உயிர் துறந்தனர்.”

“சாம்பல் பூத்த மண். சிதறிச் செத்த உடலங்கள்! இவற்றையே விட்டுவந்தோம்!” என மெல்லெனத் தொடங்கி, வரிசையை நீட்டின ஏவற்கணங்கள்!

40

சா அரசன் சிரித்தான்! கோபச் சிரிப்பு அல்ல; ஏளன நகைப்பும் அல்ல; ஏமாற்ற நடை!

“சாகடித்துப் பயன் என்ன?” என்றான் அவன்!

ஏவல்கள் அதிசயத்தில் திகைத்தன!

“சாவுதான் எம் வடிவம் அல்ல, முண்டங்களே!” என முழங்கினான் அவன்! மீண்டும் அழுத்தமாய்க் கூறினான்—

“எம் ஆட்சி நீடிப்பது எதனால்......? சாவினாலா?”

விளங்காது பிதுங்கின கீழ் நின்றவை!

“மக்கள் உயிர்வாழ்வதால்தான் நாம் ஆள்கிறோம்!” என்றான் அவன்.

எதுவும் விளங்கவில்லை அவைக்கு!

“மரணம் எமக்கு ஒரு கண வெற்றி மட்டுமே! எம் நீடித்த வெற்றியும் நீடூழி ஆட்சியும் எதனால் நிலைக்கிறது?

– சாவினால் அல்ல!”

“அப்படியானால்?”

“எமக்கு வேண்டுவது செத்த உடலங்கள் அல்ல! சாவிலும் பார்க்க, சாவின்

நினைவிலே ஏங்கி அடிபணிந்து நடுநடுங்கும் உள்ளங்களே, எங்கள் நிரந்தர இடங்கள்!

நினைத்துக்கொள்ளுங்கள்! சா என்ற எமது கொடிக்கம்பம் பயம் என்ற பூமியில் தான் ஊன்றிப் பறக்க முடியும்! இதைச் செய்தீர்களா?''

பேய்கள் மௌனமாய் நின்றன.

அரசன் உற்று நோக்கினான். தன்னைப் பிறர் அறியாத அருவம் ஆக்கினான்; எங்கோ மறைந்தான்.

சிம்மாசனம் வெறுமையாய்க் கிடந்தது.

பொழுது கழிந்தது.

மீண்டும் அவன் வந்து அமர்ந்த போது அவனது தலை சிறிது நரைத்திருந்தது!

'அவர்களுள் இவ்வளவு மாற்றமா? என்ன......? எமக்குச் சவாலா?'—இவ்வாறு தன்னுள் வினவிக்கொண்டான்.

இவ்வேளை—

பூமியிலிருந்து புது இசையின் தாக்கம் எழுந்துகொண்டிருந்தது.

''அச்சமில்லை! அச்சமில்லை!''

''இந்தமண் எங்கள் சொந்தமண்!''

பூமியின் வெடிப்புக்கள் தந்த சங்கநாதம்! இளம் சந்ததியின் குரல் ஒலி! ஆண் பெண் அனைவரின் கோஷம்!

விடுதலைப் போராட்டம்!

வெருட்டலும் கொடுமைக் கும்மாளங்களும் பிடி இழந்து மறைந்துகொண்டிருந்தன.

அஞ்சாமை, ஆற்றல், வீரம்!

பூமியில் புத்தொளி!

சாவின் சாவு!

விடுதலை வாழ்வின் விடிவு!

விடுதலைப் புலிகள்



# கடைசிப் பரிசு

எல்லோரும் வருக!

இதை மனிதர்கள் வெளியிடுவதாக இருந்தால் –

''எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம்; அனைவரும் திரண்டு வருக!'' என்றெல்லாம் எழுதியிருப்பார்கள்!

ஆனால் தாமாக உணர்ந்து அனைவரும் இங்கு வருகைதந்து இருந்தனர்.

வந்திருந்தோர் தசையும் தோலும் கொண்ட உருவங்கள் அல்ல; உணர்வும் செயலுமான வடிவங்கள்!

மண்வெட்டி, கத்தி, வாள், விறகு, வியர்வை, இரத்தம், பேனா என எண்ணிறந்த வடிவங்கள்!

இது வருடாந்தக் கூட்டமும் விசேட பாராட்டு விழாவும்!

இடமும் நகர் அல்ல, காடு! அகன்ற ஆலமரம் நிழல் தந்து நின்றது. கீழே சமதரை! இங்கு –

அனைவரின் விருப்புக்கு ஏற்ப இரத்தம் எனும் செங்குருதி தலைவராய் அமர்ந்த போது, ஏகோபித்த கரகோஷம் எழுந்தது!

''குருதியார்'' என்றே தலைவர் அழைக்கப்பட்டார். சுருக்கமான விளக்க உரைகளும் கருத்துக்களும் முடிந்தன; பரிசளிப்பு வைபவம் ஆரம்பமாயிற்று.

''பரிசுகளில் முதற்பரிசு எவருக்கு?'' குருதியார் விளக்கினார்.

''எல்லோரும் பரிசுக்கு உரியவர்களே! நாம் அனைவரும் தொழிலும் செயலும் கொண்டவர்களே! எனினும், காலத்தால் எழும் கடமைகள் முக்கியமானவை. இவ்வித கடமையும் வாய்ப்பும் என்றும் கிடைப்பதில்லை! இன்றைய பெறுதற்கரிய வேளையில் வேண்டப்படுவது உணர்வும் செயலுமேயாகும். இந்த ஆண்டின் முதற் பரிசு......''

'யாருக்கு?' என்ற கேள்வி கூட்டத்தில் எல்லோர் மனத்திலும் எழுந்தது!

''இதனைத் தற்கொடையின் வடிவமாயுள்ள இளம் போராளியின் கைக்கருவிக்கும் தியாக உணர்வையே தம் மூச்செனக்கொண்டு, அதனையே ஊட்டி வரும் பேனா அவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கிறோம்'' எனத் தலைவரின் குரல் எழுந்தபோது, அதன் மகிழ்ச்சியில் மீண்டும் பலத்த கரஒலி எழுந்தது!

தொடர்ந்து மண்வெட்டி உட்படப் பலருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. எங்கும் மகிழ்ச்சி!

ஆனால் இவ்வளவுடன் விழா முடிந்துவிடவில்லை!

'' அடுத்து வரும் முக்கிய நிகழ்ச்சிக்காகவே இவ்விழா கூட்டப்பட்டது. இது

மனிதர்கள் நடாத்துவதைப் போன்ற போலிச் சம்பிரதாயங்களுக்காக அமைக்கப் பட்ட கூட்டம் அல்ல. எனவேதான் –

காலத்தை உணராத பெரும் தவறை உணர்த்தவும் – எம் மனச்சான்றை உயிர்ப் பித்து எம்மை நாம் திருத்தவும் ‘கடைசிப் பரிசு’ என ஒன்றைப் பெயரிட்டு, அதனைப் பகிரங்கமாய் வழங்கும் நிகழ்வையும் இக்கூட்டத்தில் அமைத்துள்ளோம். இது எங்கள் மரபு. இந்தக் கடைசிப் பரிசு இன்றைய கட்டத்தில் யாருக்கு உரியது?’’



‘‘யாருக்கு ?’’ என்ற கேள்வி எல்லோர் மனத்தையும் தாக்கி நின்றது! குருதியார் தொடர்ந்தார்–

‘‘இன்று தூக்கம் மறக்கப்படுகிறது! வியர்வையும் இரத்தமும் கொட்டப்படுகின்றன. இனிய உயிர்கள் ஈந்திடப்படுகின்றன! இந்தக் கட்டத்திலும்–

செயலிற் தோயாத சிலர் இருக்கின்றனர்!

இதைத் தவறு என்பதா? தயக்கம் என்பதா? துரோகம் என்பதா? இந்த வரிசையில் –

தமது மையைத் தெளிக்கத் தயங்கும் சில பேனைகளும் இருப்பது வேதனைக் குரியது! கடைசிப் பரிசு இவர்களுக்குரியதே.

இதனை இவர்கள் சார்பில், இங்கு முதற் பரிசைப் பெற்ற அதே பேனையாரை வந்து ஏற்குமாறு, அன்புடன் அழைக்கிறோம்.’’

கேட்ட நெஞ்சங்களில் ஓர் அமுக்கம் ஏற்பட்டது.

‘‘உண்மைதான்’’ என்ற கடினக் குரல்கள் எங்கெங்கோ ஒலித்தன!

விழா முடிந்த மறுகணம் ஆலமர நிழல் வெறிச்சோடிக் கிடந்தது.

எல்லோரும் வெவ்வேறு இடங்களில் தம் கடமையில் ஆழ்ந்து நின்றனர் – பேனைகள் உட்பட!

**வெளிச்சம்**
*தை - மாசி 1992*



# உண்மையின் வீச்சில்!

“மனிதர் வருகினம்! மனிதர் வருகினம்!” பயத்துடன் இவ்விதம் கூறிய இளம் உருவத்தைப் பார்த்து மூத்த உருவம் சிரித்தது!

அது அச்சத்தை எப்போதோ விட்டொழிந்த நிலையில் முன்சென்றுகொண்டிருந்தது.

மீண்டும் சிறியது குரல் கொடுத்தது.

“மனிதர் வருகினம்!”

பெரிய உருவம் அழுத்தமாய்க் கேட்டது.

“ஏன் நீ மனிதரைக் கண்டு பயப்பட வேண்டும்? எங்கள் பெயரென்ன? அதை முதலிற் சொல்.”

பதில் வரவில்லை.

“மீண்டும் சொல்லுகிறேன் – எங்கள் பெயர் பொய்! பொய்! நாங்கள் காட்டில்

வாழமுடியாது. குருவிகளின் நாக்கிலும் வாழமுடியாது! எமக்குத் தஞ்சம் மனிதர் தான். எங்கள் விளைநிலம் அவர்களே! விளங்குகிறதா?''

உரையாடிக்கொண்டே அவை ஒரு நகரின் நுழைவாயிலை அடைந்தன.

வாயிற் காவலன் அங்கு நின்றான். சந்தேகப் பார்வையுடன் அவன் கேட்டான்—

''நீ பொய் அல்லவா?''

பொய் புன்னகை பூத்தது. ''இல்லை'' என ஆறுதலாகத் தலை அசைத்தது!

''சரி, நீங்கள் போகலாம்'' என்றான் காவற்காரன்!

இரண்டும் நகருள் நுழைந்தன. பூட்டிக் கிடந்த ஒரு பொதுக் கட்டடத்துள் அவை அமர்ந்தன. பெரிய பொய்யின் உபதேசம் தொடர்ந்தது. எனினும் ஏதோ பிரியா



விடைப் பேச்சைப் போல அதன் குரல் இருந்தது.

''எனக்குத் தெரிந்த அளவில் நீ மூன்றாவது சந்ததி. என் முன்னோர் மூட நம்பிக்கை, கேள்வி கேட்டறியாத கீழ்ப்படிவு என்பதன் மூலம் அன்றைய மக்களை ஆண்டனர்; ஆட்டிப்படைத்தனர்!

நான் எழுந்தபோது மனிதரின் வாய்ப்பேச்சு மேலோங்கி நின்றது. இதற்கேற்ப நானும் வானளாவப் பேசுவதைக் கற்றுக் கொண்டேன்! மனித கூட்டம் என்னை தோள்மேல் சுமந்து சென்றதை நினைக்கச் சிரிப்பு வருகிறது! ஆனால் .. ''

''சொல்லுங்கள்'' என்றது இளைய பொய்.

''ஆனால் விழிப்பு என ஒன்று மனித சமுதாயத்தில் ஏற்பட்டுவிடுவதுண்டு. இதனால் என் பேச்சு மேடை முறிந்தது; என் செல்வாக்குச் சாய்ந்தது. எனினும், என் பட்டறிவு பெரிது!

சிந்தித்தேன்; மீண்டும் பொய்மை நீடூழி நிலைக்க வழி வகுத்துவிட்டேன். இனி இளம் சமுதாயம் கண்மூடி நிற்கும்; அவர்களை நீ ஆளப்போகிறாய்!'' என்றது அந்த அனுபவப் பொய்.

''எதைக் கூறுகிறீர்கள்?'' ஆவலுடன் கேட்டது இளம் பொய்.

''என் கைபட எழுதிவைத்துள்ள பாட நூல்களை அப்பனே! அதிலும் வரலாற்று நூல்களை! தன் வளத்தையோ வரலாற்றையோ அறியாத எந்த இளம் சமுதாயம் வாழ முடியும்?''

''அவை வாழ மாட்டா'' எனக் கூவிற்று இளம் பொய்!

அவ்வேளை, இவை எண்ணாத புரட்சிப் பேரலையின் தாக்கம் தூரத்தே எழுவது தெரிந்தது.

சிந்தனைப் புரட்சியா? இளைஞரின் கிளர்ச்சியா?

விடுதலைப் பேரொலி!

நிமிர்ந்து பார்க்குமுன், பருத்த நூலொன்று எறிபட்டு இங்கு விழுந்து கிழிந்தது!

''இது நான் எழுதி வைத்த நூல்'' எனப் பெரிய பொய் தன் நெஞ்சைப் பொத்தியபடி கூற முனைந்தது. ஆனால் குரல் எழும்பாத நிலையில் சாய்ந்தது.

சிறிது நேரத்தில் இவற்றின் அடிச்சுவடும் அங்கில்லை!

**சாளரம்**
***வைகாசி 1992***





# கழுதையல்ல கட்டெறும்பு!

"கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று!"

"என்னெடா பாடுகிறாய்?"

அதட்டலாய் எழுந்த இக்கேள்வியால் காற்று அசந்தே போய்விட்டது!

யாரோ கூறிய பழமொழியைப் பாடிக் கொண்டு வந்த காற்றுக்கு, இந்த எதிர்பாரா அதட்டல் திகைப்பைத் தந்தது உண் மையே! காற்று கீழே பார்த்தது.

கேள்வியை எழுப்பிய கட்டெறும்பும் தலையை நிமிர்த்தியபடி கண்ணெதிரே நின்றது!

கட்டெறும்பும் காற்றும்போல் அல்ல — துணிவும் திகிலும் போல அவையிரண்டும் காட்சி அளித்தன!

மரத்தின் மேற் கொப்பிலிருந்த காகம் இவற்றைப் பார்த்து "ஆகா" என ரசித்

தது! அது சுதந்திரப் பிராணி. தலையை அசைத்துவிட்டு மீண்டும் பார்த்தபோது –

எறும்பு எங்கோ விரைந்துவிட்டது.

காற்று கனதி வடிவத்தில் தயங்கிக் கொண்டிருந்தது.

'கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று என நான் பாடியது உண்மை. அது பழமொழி. அதில் என்னதான் பிழை? எறும்புக்கு ஏன் இந்த ஆத்திரம்.'

இவ்விதம் காற்று தன்னைத்தான் கேட்டுக்கொண்ட போதிலும் ஏதோ ஒரு தவறை அதன் உள்மனம் உணர்த்திற்று.

'இதனை யாரிடம் கேட்டறிவோம்?' திடீரென ஒரு யோசனை தோன்றிற்று.

'கழுதையிடமே கேட்போமே!' இந்த எண்ணத்தோடு அது பறந்தது.

தூரத்தே ஒரு கிராமம். அந்த ஊர் மனையில் ஒரு கழுதை நின்றது.

அதன் முதுகில் ஒரு பாரச் சுமை. எசமான் வாளியில் கொண்டுவந்த கஞ்சியை வைத்தான். அதனைத் தலை குனிந்தபடி கழுதை குடித்தது. அவன் வா என்று கூறிய வழியே அது பின்சென்றது!

காற்று இதனைப் பார்த்தது. ஏளனமே பிறந்தது!

கழுதையுடன் கதைக்க அதற்கு மனம் எழவில்லை. கட்டெறும்பின் உருவமே அதன் கண்முன் தெரிந்தது.


"கழுதை வேறு, கட்டெறும்பாகிய நாங்கள் வேறடா! எம்மை எவரும் பிடிக்க முடியாது. வைத்து வளர்க்க முடியாது. அடிமைப்படுத்தவும் முடியாது!"

எறும்பின் பலத்த குரல் இவ்விதம் கேட்டது. மின்னலின் பின் எழும் முழக்கம் போல் அது இருந்தது. காற்று தன்னுள் தெளிந்துகொண்டது.

'கழுதை தேய்ந்தாலும் கட்டெறும்பு ஆகாது' என்ற உள்ளக் களிப்புடன், அது உயர்ந்து எழுந்தது.

"கழுதையின் மந்த நிலை வேறு; கட்டெறும்பின் மழுங்காத தன்மானம் வேறு" என்ற புதிய இசை, அது சென்ற வழியே பரந்துகொண்டிருந்தது!

சிரித்திரன்
ஆடி - ஆவணி 1994



# தெளிவு

**கொடிகள்!**

இவற்றுள் எத்தனையோ வகை!

தளிர்க்கொடிகள், காய்ந்த மூலிகைக் கொடிகள், தங்கத் தாலிக்கொடிகள், எண்ணியதைச் செய்து எழும் வெற்றிக் கொடிகள்! இவற்றைவிட அதோ –

அந்த இரு தென்னை மரங்களையும் தொடுத்தபடி தெரிகிறதே ஒரு கயிறு, அதற்கும் பெயர் கொடிதான்! அது சட்டைகள் காயும் துணிக் கொடி!

வெயில் மழை இருள் – எதுவும் இதற்குச் சமன்தான். இங்கேயே இது நிற்கும். ஆனால் இருந்தபடி எந்த உயரத்தையும் பார்க்க முடிகிறது.

அவ்விதம் மேலே பார்க்க ..... ஆகா!

எட்டாத வானும் வெண் முகிலும் –

இவை மட்டுமா?

உயர் வானில் ஆடி அசைந்தபடி ஒரு பட்டம் பறந்துகொண்டிருந்தது 'பாம்பன் கொடி' என இதனை மனிதர் அழைப்பராம்.

ஆனால் அந்தக்கொடியும் அதன் நுண்ணிய கயிறும் மட்டுமா அங்கு தெரிந்தன?

இன்னொன்றும் கண்ணை உறுத்திற்று. தன்னைப்போலவே இன்னொரு கயிறும் மேலே தெரிந்தது. ஆனால் அது அந்தப் பாம்பன் கொடியுடன் இணைந்தபடி வானில் அசைந்துகொண்டிருந்தது!

பார்க்க நெஞ்சம் கனதியுற்றது; துன்பம் மேலும் ஊட்டிற்று.

'என்னைப் போலல்ல, அது பறக்கும் கயிறு. நானோ இங்கு கட்டுண்ட கயிறு, ஐயோ!'

52

உள்ளத்து உணர்வின் ஊடாக அவை ஒன்றை ஒன்று பார்த்தன. உற்று நோக்கின. பின்னர் ஒன்றி உரையாடின.

பட்டத்துக் கயிறு கேட்டது –

''என்ன, நீ கட்டுண்ட கயிறா? இல்லையே!''


''இல்லாமல் வேறென்ன – நீ வானத்தில் அசைந்தபடி பறக்கிறாய். நானோ கீழே இந்தத் தென்னைகளின் இறுக்கத்தில் இருக்கிறேன். உணர முடிகிறதா?''

''அப்படி அல்ல'' எனச் சிரித்தது மேலே வானில் நின்ற கயிறு! அது தொடர்ந்தது –

''உணர்ந்துகொள். இங்கு நான் இதன் வாலாக ஆடுகிறேன்! நீ சுயமாக இருக்கிறாய். பயனோடு வாழ்கிறாய். இது போதாதா?''

கொடியில் காய்ந்து நின்ற துணிகள் கைகொட்டி மகிழ்ந்தன!

சிரித்திரன்
பங்குனி 1986



# பட்டறிவு

எங்குதான் ஆனந்தம் இல்லை!

ஆகாய வெளியிலும் மண்ணிலும் நீரிலும்— எங்குதான் இன்ப அலைகளின் வீச்சுக்கள் இல்லை!

கரையிலே நின்று கடலின் அலைகளைப் பார்ப்பவனுக்கு, அதன் வெளி மோதலும் புரளலும் தெரியலாம். இவ்விதம் எட்ட நின்று அவன் இன்பத்தை நுகர முயலலாம். ஆனால் முழுமை இன்னும் ஆழத்தில் உள்ளது!

அவ்விதம் அகன்று நின்ற அந்தக் கடலிலே – அதன் அடித்தள நீரிலே – அங்குள்ள தரையின் பச்சைத் தாவரங்களில் பட்டும் படாமலும் புரண்டு விளையாடிக்கொண்டிருந்த அந்தச் சிறுமீன், தன் முழுவாழ்வைக் கண்டுகொண்டிருந்தது!

அந்த அடித்தள நீரிலே வீழ்ந்த வெயிலின் கதிர்கள் மெல்லிய ஒளியாகி நின்றபோது –

53

இன்ப அழகு எங்குதான் இல்லை என்பது மேலும் புலனாயிற்று!

ஆனால் -

பொழுது எதையும் மாற்றவும் மறைக்கவும் - மறைந்ததைப் புதுவடிவில் ஆக்கவும் - தயங்குவதில்லை!

இதுவரை விளையாடி நின்ற மீனின் இன்பக் களிப்பு, அங்கு ஓர் எதிர் ஓசை எழுந்தபோது இடைநிறுத்தம் பெற்றது. துள்ளி விளையாடிய அந்த உல்லாச மீன் ஒரு கணம் அசையாமல் நின்றது. அதன் புலன்கள் துண்டாடப்பட்டன; இதயம் அடித்துக்கொண்டது. ஆமாம் -

ஒரு பெரிய மீன் வருகிறது; தன்னை விழுங்க வருகிறது.

ஆனால் ஆபத்தின் அறிவிப்பு அச்சுறுத்தலோடு நிற்பதில்லை. அது விழிப்பையும் தருகிறது; வேகத்தைப் புகுத்தி விடுகிறது. அந்தச் சிறிய மீன் இப்போது எங்கே?

கடலின் அடித்தளத் தரையிலும் குகை போன்ற கற்பாறைகள் உள்ளன.

அவ்வித குகை ஒன்றின் மிக ஒடுங்கிய வாயிலின் உள்ளே சிறுமீன் விரைந்து விட்டது! என்ன விரைவு! எவ்வளவு பாதுகாப்பு! அங்கும் நிரம்பிய கடல்நீர்தான்!

மீண்டும் ஆறுதல். நேரம் செல்லச் செல்ல களிப்பு! அதனுள் அசைந்து புரண்டு நீச்சல்!

நேரம் செல்கிறது.

பெரிய மீன் போய்விட்டது.

தப்பினேன் என்ற களிப்போடு, தான் நுழைந்த உள்வாயில் வழியே சிறுமீன் வெளியில் வரும்போது -

அங்கு எதிர்பாராத இன்னொன்று நிகழ்கிறது! என்ன?

எதுவும் அறியாத குஞ்சுமீன் ஒன்று உள்ளே நுழைய வருகிறது!

சிறுமீனின் அகன்ற வாய் அந்தக் குஞ்சுமீனை வரவேற்கிறது. வாயின் உள்ளே குஞ்சுமீன்!

- ஆனால் ஏனோ?

தனது திறந்தவாயை மூடாது சிறுமீன் அப்படியே நிற்கிறது! அதன் விரிவுக்குள் வந்த குஞ்சு திணறி அடித்துக்கொண்டு வெளியே ஓடுகிறது!

அதன் பின்னரே சிறுமீனின் வாய் அமைதியாக மூடுகிறது. தான் உண்பதிலும் கூடிய இன்பம் உள்ளே பிறக்கிறது! தப்பிய குஞ்சைப் பார்த்த கண்கள் புது ஒளி பெறுகின்றன! அதில் களிப்பு மட்டுமல்ல, கனிவுங்கூட! சூழல் எங்கும் அதே ஒளி!

முத்தமிழ்விழா மலர்
*1992*

PUBLIC LIBRARY
JAFFNA.



# சக்கை லொறி —
# சீதனத்திற்கு!



**மா**வீரர் துயில்கொள்ளும் இல்லம்.

அந்த மாமணிகள் தம் அழியாத குரல் கொண்டு உரையாடுகின்றனர்.

இன்று மீண்டும் ஒரு வியப்பு; மகிழ்ச்சிப் பெருக்கு!

"உண்மையாடி? அப்படிச் செய்தாளா?"

"செய்ய நினைத்தாள்; செய்யவில்லை."

"ஏன்?"

"அதுதான் பெண்ணினத்தின் சாபக்கேடு."

எழுந்த வியப்பும் மகிழ்வும் மங்கிக் குறைந்தன. ஆனால் ஒரு மௌன உறுதிப்பாடு மேலும் சுடர்விட்டது.

"கலங்காமற் சொல் அம்மா, நடந்ததை விரிவாகச் சொல்." கூட நின்ற மறவனின் குரலும் கலந்துகொண்டது; கணீரென்றன ஏனைய திலகங்களின் குரலும்.

"அது நடந்த பின் சில காலம் களமாடியே இங்கு வந்தேன். ஆனால் அந்த அநீதியை, அக்கிரமத்தை மறக்க முடி

யாது!''

''அதைத்தான் சொல்லடி!'' உரிமைக் குரல்கள் மேலும் இடித்தன.

''அது அரசியற் களமல்ல – எம் சமுதாயக் களம் அந்நிய எதிரியிலும் கூடிய கொடுமை இங்குதான்!''

''சொல் நீ – ''

''அங்கு எம் ஊரில் ஒரு கல்யாணம்! சாதகம் பார்த்து,

பெண்ணின் நிற வடிவு பார்த்து,

அந்த ஆண்மையற்ற மாப்பிள்ளைக்கு வீடு, காசு பல லட்சம், நகையாக பவுண் பல சேர்த்துக்கொடுத்து –

வேதம் ஒலிக்க மேளம் முழங்க,இதற்குள் கொடுத்த நகையில் ஏதோ குறை என உள்ளே குழப்பம் எழ –

கூடப்பிறந்த தங்கை தன் கைக்காப்பைக் கழற்றிக் கொடுத்தாளாம்!''

''பின் என்ன நடந்தது?''

''பெண்ணின் கழுத்தில் அவன் தாலி கட்டக் குனிந்த அந்த வேளையில்தான், நெஞ்சம் குமுறி நின்ற தங்கை கூவினாளாம் –

'அதை அக்கா, நீ அவன் கழுத்தில் கட்டு! – அவனின்ர கழுத்தில் கட்டு என'.

''அப்போ?'' ஆவற் குரலொன்று இவ்விதம் துடித்தது.

''மணப்பெண்ணும் தன்னுள் இதனையே எண்ணினாள்; ஆனால் செய்யவில்லை – குனிந்த பெண்ணாகவே இருந்தாள்!

ஆனால் மணப்பந்தர் கெம்பிற்று! பெண்வீட்டார் குனிந்த பதுமைகளாயினர். ஆண் வீட்டார் இரணியர் ஆகினர் – தரகர் உட்பட!''

''பின் என்ன நடந்தது?''

''கெஞ்சிக் கூத்தாடிய பெண்வீட்டாரை ஏசிவிட்டு, பெற்ற சீதனத்துடன் கட்டிய பெண்ணையும் இழுத்துச் சென்றானாம் மணமகன் – தனது பெற்றார் சுற்றத்துடன்!

இனி அவள் அந்த வீட்டுக்கு வேலையாள்;நிரந்தர அடிமைதான்!''

''பிரலாபம் வேண்டாம்; செய்ய வேண்டியதைச் சொல்!''

மாவீரரின் முழக்கம் இவை!

இவ்வேளை ஒரு தரகர் தவறுதலாக விட்ட காகிதத் துண்டு காற்றிலே பறந்து வந்து நின்றது; சாட்சியாய் வந்து நின்றது. அதில் இருந்த குறிப்பு 1 – 'வெளிநாட்டு மாப்பிள்ளை. வடிவான பெண்ணாக இருக்கவேணும். பதினைந்து லட்சம் கொடுத்தால் எடுக்கலாம்.'

குறிப்பு 2 – 'பெடியள் பலர் சண்டையிலை செத்ததாலை இங்கை உள்ளவை பெரும் கிராக்கி எழுப்பினம். எண்ணாத சீதனம் கொடுத்தால்தான் மாப்பிள்ளை எடுக்கலாம். எண்டாலும் பார்ப்பம்.......'

58

''துரோகிகள்! பேடிகள்!'' என முழங்கியது அந்தப் புனித சூழல். ''இதற்கு வழி என்ன?'' என மேலும் ஒரு ஆர்த்தல் முழக்கம்.

அந்தப் புதிய வனிதையே பதில் சொன்னாள் –

''அன்று இதனை இடித்துக் கூறியதற்கே என்னை அக்காவின் மணப்பந்தர் ஒதுக்கியது. ஆனால்-''

''அந்தத் தங்கை நீதானா?''

''ஆமாம். ஆனால் அது பெரிதல்ல இனிச் செய்ய இருப்பதைச் சொல்லுகிறேன்.''

''சொல்! சொல்!'' என்றன அனைத்தும்.

''இது பற்றி நெடுகப் பேசி வரும் பிரச்சாரகர்களை இனித் தூணில் கட்டிவிட்டு – செயல் வெளிவரட்டும்; தீவிர செயல்! தீயதைத் தகர்த்தெறியும் நடைமுறை!''


''அதற்கு''

''ஒற்றைத் துவக்கும் கட்டுத்துவக்கும் போதாது; 'சிங்கிள்சொட்'டும் 'ஓட்டோ அடி'யும் போதாது! சீதனத் தகர்ப்பிற்கு இனி வேண்டுவது – சக்கை லொறிதான்!''

''ஆம், சக்கை லொறிதான்!'' மாவீரரின் ஒருமித்த ஒலி இவ்வாறு எழுந்தது.

எம் இதயத்திலும் இது கேட்கிறதல்லவா?

விடுதலைப் புலிகள்
*ஆடி 1993*



# வினோதக் குஞ்சு!

**கோ**ழிக் குஞ்சு!

இந்த நினைவில் குழந்தைகள் துள்ளி மகிழ்ந்தன!

''நாளைக்குத்தான் குஞ்சுகள் பொரிக்கும். கோழி கூட்டிவரும் அப்போ பார்ப்போம்!'' என அம்மா எவ்வளவோ சொல்லியும் பிள்ளைகள் இன்றே குதிக்கத் தொடங்கிவிட்டனர்! அவ்வளவு மகிழ்ச்சி!

ஆனால் அப்பா சிரிக்கவில்லை. நெஞ்சம் படபடக்க அவர் இருந்தார்.

'அந்த' முட்டையும் பொரிக்குமா?

– இதுவே அவரது ஏக்கம்!

முட்டைகளுடன் முட்டையாய் அடை வைத்த விசித்திர முட்டை அது! குறளி வித்தைக்காரன் ஒருவன் கொண்டுவந்த முட்டை அது!

''இது எவரும் காணாத காட்டிலை எடுத்த முட்டை, சாமி; 'விருப்பணாம் குருவி' முட்டை!

இது பொரிச்சு வீட்டிலை வளர்ந்தா நீங்க விரும்பின எல்லாம் கிடைக்கும்'' என்றான் அவன்!

பாதிக்காசை குஞ்சு பொரித்த பின் வாங்குவதாகக் கூறி அவன் போய்விட்டான்! அந்த முட்டை பொரிக்குமா என்பதே அப்பாவின் படபடப்பு!

அம்மா கூறிய மறுநாள் வந்தது. விடியவே தாயின் கீழ் உள்ள குஞ்சுகளின் குரல் ஒலித்தன! குழந்தைகள் சிரித்துக் குதித்து மகிழ்ந்தன!

அப்பா தன் பதற்றத்தைக் காட்டாது வந்து பார்த்தார். எல்லாம் வெள்ளையும் மஞ்சளுமான உருண்டைக் குஞ்சுகள். ஒன்று மட்டும் எலும்பும் தோலுமான பேய்க்கறுப்புக் குஞ்சு! பார்க்க வெறுப்புத் தான் ஏற்பட்டது!

''வரட்டும் அவன்'' என்றபடி நின்றார்!

ஆனால் –

சொல்லிவைத்தாற் போல அந்த விசித்திர வித்தைக்காரனும் வந்தான்!

''என்னடா மடையா! 'விருப்பணாம் குருவி' எண்டு ஏமாத்தினாய்? பொரிச்ச குஞ்சைப்பார்! அது விருப்பு இல்லை. வெறுப்பணாம் குஞ்சடா! வெறுப்பணாம் குஞ்சு!'' என்று கர்ச்சித்தார் அப்பா!

''சரிதானே சாமி? விருப்புக் குருவி இடும் முட்டை வெறுப்பையும் சிலவேளை பொறப்பிக்கும்! அது பிடிக்காதுதான். ஆனா என்னிலை பொழையில்லை சாமி!''

அப்பா விளங்காது குதித்தார்!

அவன் தொடர்ந்து கூறினான்; பணிவோடும் தெளிவோடும் கூறினான் –


'சரி, இன்னொருவகைமுட்டை இருக்கு சாமி. அது மாறாது. சிறுசிலும் வடிவு தான், வளர்ந்தாலும் வடிவுதான்.''

''என்னெடா அது?''

''ஆமா, அது வீரம் சாமி வீரம்! அது சளைக்காது. இளசிலும் வடிவு, பெரிசிலும் வடிவு! வீராங்குருவிக் குஞ்சு வேணுமா சாமி! விலைதான்கூட!''

**சிரித்திரன்**

***ஐப்பசி - கார்த்திகை 1991***



# சிறுமையிற் பெருமை!

"நீயா நானா பெரிசு?"

இந்த அமர்க்களம் மனிதருக்குள் மட்டும் ஏற்படுவதல்ல.

மனிதன் தொட்ட எந்தப் பொருளுக்கும் இது ஏற்படக்கூடியது என்பதுமல்ல-- நிச்சயம் ஏற்பட்டேவிடுகிறது!

வீட்டின் உள் மண்டபத்திலே அந்த வானொலிப் பெட்டி, எப்போதிருந்தோ தனி இடம் வகித்து வந்திருக்கிறது. ரி. வி. எனும் தொலைக்காட்சிப்பெட்டி சமீபத்தில் வந்தது. இரண்டுக்கும் தனித்தனி ஆதிக்கப் பரப்பளவு உண்டு. எனினும் எப்படியோ எழுந்துவிட்ட எண்ணக் குமுறல் தான்—

"நீயா நானா பெரிசு?" எனப் படமெடுத்து நின்றது.

சும்மா பார்த்துக்கொண்டிருந்த இரண்டின் பார்வையும் முதலில் விறைப்பாயின;

பின்னர் வெறுப்பாயின. இப்போ மனிதர் கேட்காத விவாதமும் ஏச்சும் அங்கு வெளி வரத் தொடங்கின.

''குரலை மட்டும் வைத்துக்கொண்டு உலகை ஆட்டிப்படைக்கலாம் என எண்ணிவிடக்கூடாது'' என ஒரு போடு போட்டது ரி. வி.

''காட்சியைக் காட்டி உலகை மயக்கலா மாக்கும்!'' – இது வானொலியின் பதிலடி.

62

''பொய்யையெல்லாம் புதினம் எனக் கூறி வாழ்வது பெரிய செயல்தானே?''– ரி- வி. இவ்விதம் மறுகணை தொடுத்தது.

வானொலிக்கா பதில் கூறத் தெரி யாது?

''அரசியல்வாதிகளைத் தலையில் சுமந்துகொண்டு திரிவது நானல்ல'' என் றது அது.

தொலைக்காட்சிப்பெட்டி விட்டுக் கொடுக்கவில்லை –

''என்னைப்போல ஏமாற்ற ஒரு துளி தானும் உன்னால முடியுமா?''

கெடுதிக்குத்தான் கூடிய புள்ளி என்ற திருப்பம் இந்த அடிபிடியில் எழுந்தது!

''என் பேச்சைக் கேட்கும் ஏமாளிக ளின் தொகை உனக்குத்தெரியுமா?''– இது வானொலியின் சவால்!

''காதால் கேட்டு மட்டுமல்ல, கண் ணாலும் பார்த்து மயங்கும் என் கூட்டத்த வர்களின் தொகை உனக்குத் தெரியுமா? அல்லது ஒரு பொய்விளம்பரத்திற்கு எவ் வளவு காசு எடுக்கிறேன் என்பது, உனக்கு விளங்குமா? நீ குருடு!'' என நேரடித்தாக்குதலில் இறங்கியது தொலைக் காட்சிப் பெட்டி!

வானொலிக்குக் கோபம் தலைக்கேறி யது; வீரிட்டது!

''நீ......''

இதற்குள் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

அங்கு வீட்டின் பெரியவர் உள்ளேயி ருந்து வந்தார்.

சாப்பாட்டுத் தட்டொன்றை குசினியி லிருந்து வெளியே எடுத்துவரும் சமையற் பெண்ணைக் கண்டார்–

''என்ன அது?''

''மீதிச் சாப்பாடு. நாளை பழுதாகி விடும்; அதை நாய்க்கு வைக்கப் போறன்.''

இதற்குப் பெரியவரின் கட்டளை அழுத்தமாக எழுந்தது –

''நாய்க்கு வைக்கவா? நேற்றுக் குளிர்ப்பெட்டி வாங்கியது எதற்கு? கொண்டு போய் அதற்குள் வை. நாய்க்கு வைப்பதை நாளை நாங்கள் தின்னலாம்.''

தங்கள் சாதனையில் ஒரு தோல்வி யைக் கண்டது போல வானொலியும் தொலைக்காட்சிப் பெட்டியும் தலை குனிந் தன!

''குளிர்ப்பெட்டி கெட்டிக்காரன். கொடை என்ற மனித இயல்புக்கே அள்ளி வைத்துவிட்டானே'' என அவை வியந் தன!

பெரியவர் நல்ல சுகமே வீற்றிருந் தார். ஒரு குருவிதானும் அங்கு தலை காட்டவில்லை!

**பாதுகாவலன்**
*1988*





# அதிர்ச்சி நோய் எமக்கல்ல!

பெரிய பறவைகள் வானில் உயரப் பறந்துகொண்டிருந்தன. தரையில் இருக்கும் கண்களுக்குத் தம்மைச் சிறிதாக்கும் அளவு அவை உயரப் பறந்துகொண்டிருந்தன.

பூமரச் செடிகளின் நடுவே சிறிய தேன் குருவிகளும் சிறகடித்து, இசை பரப்பிக் கொண்டிருந்தன.

இவை செல்லாத இடமெல்லாம் உயர்ந்தும் பதிந்தும், பறந்தும் வீழ்ந்தும், இன்னொன்று தத்தளித்துக்கொண்டிந்த தது அது மனித உள்ளம்.

"ஏன் பதறுகிறாய்?"

"பயமாக இருக்கிறது."

"ஏன் பயம்?"

"குண்டுவிழப் போகுது...... ஆமி வரப் போறான் ...... யோசிக்க யோசிக்க பயமாயிருக்கு."

99058

கேள்வியை எழுப்பிய குரல் இப்போது சிரித்தது!

"நீ யோசி, ஆனால் பயத்தோடு யோசியாதே!"

"ஏன்?"

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

"பயந்தவனை எதுவும் வெருட்டும்; தளர்ந்தவனை எதுவும் வெல்லும் என்பதால்தான்!" என்றது அந்தக் குரல்.

"அப்போ?" என ஏங்கியது மனம்.

குரல் கூறிக்கொண்டே போயிற்று –

"பயந்து சாகாதே! துணிவுதான் தெளிவைத்தரும். அதுவே அறிவைத்தரும்; ஒளியைத்தரும். அந்த ஒளிகொண்டு பார்; பாதை தெரியும்.

பயத்துடன் உன் கண்களை மூடாதே. அது இருளையே புகுத்தும்! விழித்த கண்ணோடு பார். வருங்காலப் பாதையை அது தரும். துணிவும் அறிவுமே உன் கண்கள், விளங்குகிறதா?"

"ஆமாம்" என குரல்கொடுத்தது மனித உள்ளம்.

ஆனால் அந்தக் காற்றில் எழுந்த குரல் அத்துடன் விட்டுவிடவில்லை; அது தொடர்ந்தது –

"அடிக்க வருவதை நீ அடி! கொல்ல வருபவனை நீ கொன்றுமுடி! வாழ்வுக்கு வேண்டிய வழியும் நெறியும் – பொய்யா மொழியும் – இதுதான்!" எனத் தொடர்ந்தும் முழங்கிற்று அக்குரல்.

வானம் இதனையே எதிரொலித்து ஓய்ந்தது.

ஒரு கண அமைதி தொடர்ந்தது.

புதிய உயிரோட்டமொன்று தன்னுள் எழுவதை அந்தத் தத்தளித்து நின்ற மனம்



29946 cc
PUBLIC

உணர்ந்தது. அது விழிப்பாக, வீர உணர் வாக உதிரத்துள் செறிந்தது! என்ன......?

முன்பு பயந்து நின்ற மனத்தை இப்போது அங்கு காணவில்லை; வீர மனிதனொருவன் அங்கு தலைநிமிர்ந்து நின்றான்! காலவேகத்தின் நொடிப்பொழுதில் ஒன்று, நூறு, ஆயிரம் ஆயின! விடுதலை வேண்டும் இனமொன்று அங்கு கரம் உயர்த்தி நின்றது; புதிய வரலாறே உருவாகி நின்றது!



"அதிர்ச்சியும் பயமும் எமக்கல்ல!

அவையும் - அழிவும் - எம் பகைவனுக்கே!'' என்ற விடுதலையின் விளக்கம், அங்கு ஒலித்துக்கொண்டிருந்தது!

**விடுதலைப் புலிகள்**

***மாசி 1992***



# உயர்வு

தன்னுள் ஒரு பெருமையைத் தாங்கிய வண்ணம் அழகுற நின்றது விழி!

எழிலுக்கு எடுத்துக் காட்டாக, உணர்வுகள் அத்தனைக்கும் உருவகமாக நின்ற தனக்கு, எவர்தான் நிகர் என்பது அதன் கொள்கை.

காவிச் சுமந்து கரடுமுரடான பாதங்களைப் பார்க்கும் போது, அதற்குப் பரிதாபமாகத் தோன்றும். தொடர்ந்து அதில் ஒரு கணிப்பின்மையே கலந்திருக்கும்!

“பாடுபடப் பிறந்தவன் பாடுபட வேண்டியதுதான். இதை யாரும் தடுக்க முடியாது” - இவ்வளவுதான் கைகளைப் பார்க்கும் போது விழிகளுக்கு ஏற்படும் மதிப்பீடு!

நான் இவ்வளவுக்கும் உயர அமர்ந்திருப்பவன். அனைத்தின் அருமைக்கும் பெருமைக்கும் உதாரணம் நான் - இதுவே

அதன் கொள்கை என்பது, அதன் பார் வையிலேயே தொனிக்கும்.

ஒரு நாள், தன் பெருமையைத் தானே கணக்கிடத் தொடங்கிற்று.

"உயர்வுற இருப்பவன் -

அழகில் சிறந்தவன் -

உணர்வுகள் அனைத்தையும் சித் திரித்து நிற்பவன் ......"

"நீ மட்டும்தானா ..... ?"

இவ்விதம், ஒரு நிதானம் படிந்த சிரிப் பொலி கீழிருந்து எழுந்தது.

வெருட்சியோடு, கையையும் காலையும் பார்த்தது கண்!

"இல்லை, இல்லை! இது நீ பார்த் தறியாத, பார்க்க முடியாத நான்– உதடு" என, விடை பகர்ந்தது அந்த இதழ்கள்!



"இரவைப் பகலாக்குபவன் நான். என்னைவிட" எனத் தொடங்கிற்று விழி.....

"ஆனால் இருளின் நடுவே உன் தடுமாற்றம்?" என்றது உதடு.

மடக்குண்ட பெருமையைப் போல் விழிகள் குறுகி நின்றன!

"உணர்வுகளுள் கோபத்தைக் காட்டு பார்ப்போம்" – உடனே தீப்பொறி பறக்க நின்றன விழிகள்!

"நன்று, எங்கே பயத்தைக் காட்டு பார்ப்போம்,"

விழிகளின் விழிப்பிலும் துடிப்பிலும் அச்சம் நர்த்தனமாடியது!

"இரக்கம் ?"

உடன் மெழுகாகி நின்றன கண்கள்.

"சரி, உண்மையான மனித இதயத் தில் மலரும் உவப்பைக் காட்டு பார்ப் போம்."

விழிகள் குவிந்தன, விரிந்தன, அசைவற்று நிற்கவும் முயன்றன. எனினும் முழுமை பெறவில்லை.

"இல்லை, அதனை என்னால்தான் ஆக்க முடியும்."


இவ்விதம் கூறியவண்ணம் இதழ்கள் மெல்லெனப் புன்முறுவல் பூக்க நின்றன. அங்கே அன்பு தெரிந்தது; உவகை பூரணமாய் இருந்தது.

* * *

"கண்ணே! எழுந்திரு! தூக்கத்திலும் புன்னகை என்னவோ?"

அவளது கண்கள் விழித்துக்கொண்டன. ஆயினும் அன்பை – உவப்பை – தாய்மையை – உணர்த்தியபடி அந்த இதழ்கள் இருந்தன. அந்த உணர்விலே உயர்ந்து அவன் வாழ்ந்தான். உலகமே வாழ்ந்தது!

சிரித்திரன்
மாசி 1981



# ஆதாரம்

**அ**து கட்டுக் குலையாத காடு.

அங்கு அத்தனையும் சுதந்திரமாய் நின்றன. மலர இருந்த சிறு அரும்பு முதல் வானளாவ நின்ற முழு விருட்சம் வரை, எங்கும் எதிலும் அந்தச் சுதந்திர அழகு செறிந்திருந்தது.

அங்கு வானோர் விளையாடினர்!

அது விசேட நாளாகையால் அவர்களது அரசனும் அன்று வந்திருந்தான். காட்சியைக் கண்டுகளித்த அரசனுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது. வேண்டியதை அள்ளிக் கொடுத்துவிட்டுச் செல்ல விரும்பி, விருட்சங்களைக் கனிவோடு பார்த்தான்.

" இந்த அழகான காட்டை அமைத்து நிற்பதே நீங்கள்தான். உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்; தருகிறேன் " என்றான் அவன்.

மரங்கள் பேசாது நின்றன.

" நிறைந்த நீர்ச்சுனைகளை அமைத்துத் தரட்டுமா? அல்லது மழையைத் தவறாது பொழியச் செய்யட்டுமா?" இவ்விதம் வினாவினான் மன்னன்.

" வேண்டாம் " என்பது போல மரங்கள் மௌனம் சாதித்தன.

"உங்கள் வேருக்கு உகந்த உரத்தை ஊட்டிச் செல்லட்டுமா? "

அதற்கும் மரங்களிடமிருந்து விடை வரவில்லை.

" சூரிய ஒளி போதாதிருந்தால் சொல்லுங்கள். மேகத்தை அவ்வேளை விலகச் செய்யவோ, வெயிலைக் கூடுதலாய் எறிக்கச் செய்யவோ என்னால் முடியும். " இவ்விதம் கனிவுடன் பெருமையும் தொனிக்கக் கூறி நின்றான், வருகை தந்திருந்த அந்த வானவர்கோன்.

மரங்கள் அசையவே இல்லை!

" நிறைந்த நீர், சிறந்த உரம், சூரிய ஒளி - இவற்றைவிட இங்குள்ள உங்களுக்கு எதுதான் தேவை? " எனக் குரல் கொடுத்தான் வேந்தன்.

மரங்கள் சிறிது தலை சரித்துப் பார்த்தன. அவற்றுள் முது விருட்சமொன்று அழுத்தம் திருத்தமாகக் கூறிற்று.

" நீங்கள் குறிப்பிட்டதையெல்லாம் எம்மால் பெற்றிட முடியும். எம் வாழ்வுக்கு வேண்டியது வேறு ஒன்றே ஒன்றுதான்."

" என்ன அது? " வேந்தன் ஆவலோடு கேட்டான்.

"அதுதான் எம் சொந்த நிலம். எம் நிலத்தைப் பாதுகாப்பின் நாம் அனைத்தையும் பெற்றவராவோம்; நீடூழி வாழ்வோம்", எனக் கூறி நின்றது அப்பெரு விருட்சம்.

சுதந்திர வாழ்வையுணர்ந்த முழுக்காடும் அதனையே எதிரொலித்து நின்றது.

சுடர்

*மார்சழி 1976*



# புது வருடம்

"புதுவருடம் பற்றி உங்கள் திட்டம் என்ன?'' என்றதும் –

''வெற்றி'' என்ற குரல்கள் ஏகோபித்து எழுந்தன!

ஆனால் அவை வானைத்தொடும் கீதமாயல்ல, பாதாளத்தை நோக்கும் உறுமலாகவே இருந்தன. அக்கூட்டம் நடந்தது இருளில்; இடம் எங்கேயெனில், அதோ தூங்குகிறானே ஒரு மனிதன், அவனது இதயத்தில்! அவன் எழுந்தாலும் அந்த இருள் கலைவது கிடையாது.

அங்கு அடிமைத்தனம் தலைமை வகித்தது. அச்சம் அருகில் இருந்தது. கைக்கு எட்டாத தூரத்தில் ஆசை அமர்ந்திருக்க, சந்தேகம், சுயநலம் ஆகியனவும் வருகை தந்திருந்தன.

''எங்கள் ஆட்சி எங்கும் பரவவேண்டும்'' என்றான் தலைவன்.

''பரவியே வருகிறது! அதுவும் தமிழ் மண்ணில் எம் முன்னேற்றம் நிச்சயம். பணம் பதவி என இன்று அவர்களது இதயத்தில் இருப்பது நான்தான்'' என்றது ஆசை.

''அமைதியான அடிமை வாழ்வு போதும்; ஆபத்தான அரசியல் வேண்டாம் என தமிழர்களின் மத்தியில் நானும் புகுந்து கொண்டேன்'' எனப் பெருமைப்பட்டது சுயநலம். அதனை அச்சம் ஆமோதித்தது!

''அத்துடன் பாடுபடுவோரைத் தூற்றித் திரியவும் பொறாமைப் பிரிவுகளை வித்திட்டு வளர்க்கவும் மாற்றாரை வரவேற்க வழிவகை காணவும் நானும் இருக்கிறேன்'' என்றது கீழ்மை.

அந்த அடிமைத் தலைவன் பெருமையுடன் நோக்கினான். அவனது திருப்திப் பார்வைக்கு தமிழ்மண் இருள் வடிவமாய்த் தெரிந்தது. அந்தத் திருப்தியில் அவனும் அவனது ஏவல் உணர்வுகளும் அயர்ந்து உறங்கின. ஆனால் -

இவர்களது கண்ணுக்கு எட்டாத தூரத்தில், இன்னொரு உருவம் படுத்த வண்ணம் விழித்துக்கொண்டிருந்தது. அது சிறையிற் கிடந்த ஒரு தமிழ் இளைஞன். இரவைப் பகலாக்கியபடி அங்கு உணர்வுகள் தெறித்துக்கொண்டிருந்தன! அவை கையால் வீசும் ஈட்டிகள் அல்ல; நெஞ்சத்தாற் செலுத்தும் ஏவுகணைகள்!

அறம் – அஞ்சாமை – வீரம் – தியாகம் – என அவை பறந்துகொண்டிருந்தன. எங்கும் அவையே! ஒன்றல்ல, நாட்டின் ஆயிரமாயிரம் உள்ளங்கள் இவ்விதமாயின! இரவில்லாத நிரந்தர பகலாய் சில நாட்கள் பறந்தன!

அறம் காவல் புரிய, தன்னிழப்பு ஓடோடித் தன் பங்கைச் செலுத்த, வீரமும் விறலும் எங்கும் நின்றியங்க, அங்கு நாடொன்று உருவாகிற்று. உயிரிழந்தோர் அங்கு புத்துயிருட்டினர்.

ஆணும் பெண்ணும் அங்கு கைகோத்து இயங்கினர். ஆகா, அது வன்றோ காட்சி!

தூரத்தே கயமையின் காலொன்றும் சுயநலத்தின் விரலொன்றும் கிடந்தன. அடிமைத்தனம் எங்கோ பறந்தே விட்டது! அதைத் தேடுவோர் கிடையாது!

* * *




''அம்மா, இன்று புதுவருடப் பிறப்பா?'' என்றது குழந்தை.

''அத்துடன், செல்வமே, இது புது யுகத்தின் பிறப்பு'' என்றாள் தாய்.

அவர்கள் இருப்பது தமிழீழம் என்பது சொல்லாமற் தெரிந்தது.

**சுதந்திரன்**
*10.4.1977*



# தமிழீழத் திருநாட்டில்

"நான் வந்துவிட்டேன்!"

இவ்விதம் கூறிய புதிய 'புக்காரா' விமானத்தைப் பார்த்து, பழைய பொம்மர் சிரித்தது! 'சியா மாசெற்றி' என்ற பெயரில் அது தமிழீழ வானில் உயரப் பறந்து உலாவிய அனுபவசாலி!

என்றாலும், எவ்வளவோ எண்ணி வந்த புதிய புக்காரா விமானத்திற்கு இந்தச் சிரிப்பு ஒரு சூடுபோலப்பட்டது!

"ஏன் சிரிக்கிறாய்?"

"உன்னைப் பார்த்தல்ல, உடன் பிறப்பே! என் முன்னைய எண்ணத்தை, எதிர்பார்ப்பை, பட்டறிந்த உணர்வை மீண்டும் எண்ணிச் சிரித்தேன்" என்றது அந்த சியா மாசெற்றி.

புக்காராவுக்கு இப்போது சினக்க இயலவில்லை ஒரு விரும்பாத ஆவலே மேலெழுந்தது! பழைய பொம்மர் தொடர்ந்தது –

"நாங்கள் விமானப்படை! எட்டாத இடமெல்லாம் எம் தாக்கல்கள் எட்டும்! எங்கள் வீச்சிலே கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகும்! எதிர்த்தோர் சிதறிப் பலியாவர்! தமிழீழ மக்கள் சரணடைவர்! – இவ்விதம்தான் நான் எண்ணினேன்" என முடித்தது சியா மாசெற்றி.

"அப்படியானால்?"

"இன்று என் மனத்திலே சோர்வு தான் உள்ளது. இறகுகள் களைத்துவிட்டன. இந்த அரசின் வெற்றி பிற்போட்டுப் பிற்போட்டு பின்வாங்கி நிற்கிறது!" என்றது பொம்மர்.

"அதற்குத்தான் நான் வந்துவிட்டேன்!" எனத் தலை நிமிர்த்திக் குரல் கொடுத்தது புக்காரா. அது எண்ணியபடி மறுநாள் விடிந்தது. பெரும் ஆர்ப்பாட்டத்துடன் வந்த சிலருள் இருவர் அந்த புக்காராவில் ஏறிக்கொண்டனர்.

அது பெரும் இரைச்சலோடு எழுந்து உயர்ந்தது.



பழைய பொம்மர் தனியாக நின்றது; பல நினைவுகள் – உணர்வுகளின் நடுவே அது ஆழ்ந்து நின்றது. வீரம் வேறு; பொய் புழுகு புரட்டுப் பிரச்சார மூலம் வீரம் போலக் காட்டும் பொய்ம்மை வேறு. இந்தப் பொய்களையே தாங்கியபடி தன்னைப் பார்வையிட வந்த தளபதிகள், பெரும் அரசியற் தலைவர்கள் என்போரின் பழைய நினைவுகள் தலைதூக்க முயன்றன.

எதனையும் கவனியாது வெயில் மேலெழுந்துகொண்டிருந்தது.

தூரத்து இரைச்சலொன்று நெருங்கி வருவது கேட்டது

ஆம், பெரும் சத்தமிட்டபடி புக்காரா தரையிறங்கி மெதுவாக ஊர்ந்து, மீண்டும் தன் பழைய இடத்தை எடுத்துக்கொண்டது. வியர்வை கொட்டிற்று!

மீண்டும் புக்காரா, சியா மாசெற்றி தனிமையில் நின்றன'

ஆனால் புக்காராவின் முகத்தில், களிப்போ பெருமிதமோ காணப்படவில்லை. வெறுப்புக் கோபாவேசமே மேலிட்டது!

''வெறும் பொய்! பம்மாத்து!'' இவ் விதம் உரத்த குரலில் கதையைத் தானே தொடங்கிற்று.

''ஏன்?'' இது சியா மாசெற்றியின் கேள்வி. பதில் கூற புக்காரா தயங்க வில்லை --

''இவர்கள் அங்கு - நான் பிறந்த நாட்டில் -- வந்துகூறியது வேறு. அதன்படி இங்கு நான் போர்முனைக்குச் செல்லு வதாக எண்ணினேன். ஆனால் இங்கு செலுத்தப்பட்டது போர்முனைக்கு அல்ல; ஊர்மனைக்கு! குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் எங்கு தெரியுமா? மக்கள் வாழும் வீடுகளிலும் பிள்ளைகள் படித்துக்கொண் டிருந்த பாடசாலையிலும்! பசு ஒன்று உருண்டு துடித்து இறந்தது. மூதாட்டி ஒருத்தி துண்டமாய் மடிந்தாள். தெருவில் நின்ற பொதுமக்களில் சுமார் பத்துப்பேர் பலியானது தெரிந்தது. இதற்குள் புலிப் போராளிகளின் எதிர்க் கணைகள் எழுந் ததும் எனது ஓட்டி தடுமாறிவிட்டான். மற்றவன் பிழையான இடங்களிலெல்லாம் சரியாகப் பொழிந்தான்! அத்துடன் விரைந்து மேலெழுந்து இங்கு வந்துவிட் டனர்!''

''இன்னும் சிறிது நேரத்தில், பன்னி ரண்டு பயங்கரவாதிகள் சாகடிக்கப்பட்ட னர் என்ற செய்தி வரும்; கேள்!'' எனச் சிரித்தது சியா மாசெற்றி. அது தொடர்ந் தும் கூறிற்று -

''காடுகளை அழிக்கவும் அங்குள்ள உயிர் இனங்களை மாய்க்கவும்கூட சிறீ லங்கா அரசு எம்மையே பாவிக்கிறது.''

''எங்கு?''

''தமிழீழ மண்ணில் - அது வேற்று நாடு, தனிநாடு என்பதால்.''

வானத்தில் ஓசை பொழிந்தது—தமிழீழம் தனிநாடுதான் என – வானத்தில் ஓசை பொழிந்தது.

எதிர்பாராத மழையொன்று கொட்டிற்று.

அதன் நடுவே பழைய பொம்மர் தன் நெஞ்சத்தின் ஆழத்தினூடாகக் கூறிற்று, "நான் ஒன்றையே விரும்புகிறேன்."

"அது என்ன?"

"இந்தப் பொய்யான – அதர்ம – அரசின் பொம்மராய் இருப்பதைவிட, ஒரு புலிப்போராளியின் ரைஃபிளாய் இருப்பது மேல். அதனையே நான் மெய்யாக விரும்புகிறேன்."

வானம் சிலிர்த்து நின்றது!

**விடுதலைப் புலிகள்**
***சித்திரை 1993***



# ஈகம், வீரம்!

ஆணவ பலம் –

உலகை அடக்கி ஆளலாம் எனக் காட்டிநின்ற ஆதிக்க பலம், இப்போது விசாரணைக் கூண்டினுள் கூனித் தலை குனிந்து நின்றது.

இறந்த அதிகாரப் பிரமுகர், எதிரே இருந்த உயர் பீடத்தில் அமர்ந்திருந்தார்.

இது மண்ணுலகம் அல்ல!

இருள் சார்ந்தோர்க்குப் புகலிடம் கொடுக்கும் இன்னொரு உலகம்!

கனதி; மங்கிய இருள். இவற்றின் நடுவே வீற்றிருந்த அதிகாரி தனது கம்மிய குரலில் கேட்டார் –

“நீயும் என்னுடன் கூட இருந்தாய் தானே?”

“ஆம்” எனத் தலை குனிந்தது பலம்.

"வேறு யார்?"

"புலனாய்வு, பாதுகாப்பு, படை வல்லமை என யாவும் சூழ்ந்து இருந்தன."

"ஆமாம், எல்லாம் எம் முகாமில் இருந்தன; எல்லா வடிவிலும் இருந்தன, இல்லையா?"

அந்தக் கேள்வியில் கேலியுடன் விசனமும் தொனிக்கிறது.



மீண்டும் ஒரு கணம் மௌனம். அதில், நடந்த நிகழ்வுகள் நினைவில் எழுந்து மறைகின்றன.

உச்ச உயர் அதிகாரி என்ற வகையில் இவர் தமக்குரிய அறையில் இருக்கிறார். பக்கத்தில் மெய்ப்பாதுகாவலர். சூழவும் பூரண ஆதிக்க பலம், பாதுகாப்பு.

கவலையறியாத அகம்பாவ நிலை! சிந்தனை சிறகடிக்கிறது!

'தமது கட்டளையின் பேரில் எழுந்த எறிகணைகள், பீரங்கிக் குண்டுகள்! அழிக்கப்பட்ட தமிழரின் குடிமனைகள், பறிக்கப் ட்ட உயிர்கள்! இவ்விதம் அந்த இனத்தை அழிக்கவே போகிறோம்......! வெல்லவே போகிறோம்!'

இந்தப் பரவச நிலை ஒரு நொடியில் சிதறிய, பயங்கர நினைவு எழுகிறது.

"என்ன நடந்தது?" என, உயர் பீடத்தில் இருந்தபடியே கேள்வி எழுப்புகிறார்.

"சொல்லுகிறேன் எசமான். அந்நிய உதவி, இறக்குமதி ஆயுதம், அதன் படை பலம் எனப் பல வடிவிலும் இருந்தோம். ஆனால்......"

"ஆனால்......?"

"அந்த நள்ளிரவில் எம் கற்பனைக்கு எட்டாத இளம் தமிழன் ஒருவன், எமக்கு

மின்னாத இடிபோல ஆகினான். முகாம் அதிர்ந்தது!

வாகனங்கள் எழுந்து வீழ்ந்தன.

எங்கும் தீச்சுவாலை, அவல உணர்வு.

புலிகளின் சீறல்.

நனைந்த நிலம். விரைந்தோடும் காலடிகள். கைவிடப்பட்ட ஆயுதங்கள்!
இந்த அவலத்தின் நடுவே –

நீங்கள் துண்டமாய்க் கிடந்தீர்கள்.''

அதிகாரி தடுமாறியபடி ஒரு கேள்வியை எழுப்பினார் –

'' அவன் கொண்டுவந்ததும் குண்டுதானே? ''

'' குண்டு மட்டும் அல்ல. அவன் வரிந்து வந்தது...... ''

'' பயப்படாது சொல். ''


'' ஒரு மாவீரனின் ஈகம், வீரம். ''

அதிகாரி மூர்ச்சித்து மெல்லென வீழ்ந்தார்; மீண்டும் இறந்தார்.

தூரத்தே –

மண்ணுலகில், ஒளியொன்று தெரிந்து கொண்டிருந்தது. அது, அடிமை வாழ்வை அகற்ற வந்த ஈழத் தமிழினத்தின் சுடர்; மாவீரரின் ஈகம் – வீரத்தால் ஏற்றப்பெற்ற அணையாத தீபம்!

விடுதலைப் புலிகள்
கார்த்திகை 1992



# மண்ணின் குரல்

கொதிக்கும் நிலத்தின் அடியிலே பட்ட வேரொன்று தன கதையைச் சொல்லத் தவித்தது.

" சொல் " என்றேன்.

அது பதைத்தபடி கூறிற்று –

" பொன் முட்டையிட்ட வாத்தை வெட்டினானாம் பேராசைக்காரன். "

" இது பழைய கதைதானே! " என்றேன்.

" ஆனால் இன்று நடப்பதும் இது தான்! இனி நான் மண்ணுள் மடியப் போகும் சிறு வேர். ஆனால் முன்பு ஒரு பெருமரத்தின் அங்கமாய் நின்றேன். நாங்கள் கொடுத்த தழைகள் கிளைகள், பல்லாண்டு காலம் வழங்கிய பெரும் பெரும் கொப்புக்கள் ஏராளம்!

ஆனால், பாதகன் ஒருவன் எம்மை முழு மரமாய் விற்றான். வாங்கினான்

LIBRA
JAFFNA

இன்னொருவன். கிளைகளைத் தறித்த பின் எம்மை அடியோடு வெட்டி வீழ்த்தினான். விறகுக்காகக் கொண்டு சென்றான். வெறும் மணலை மட்டும் விட்டுச் சென்றான்'' என்றது.

இவ்வேளை இன்னொரு குரல் கேட்டது. அது பூமியின் குரல்.

" நான் பசுமையை ஆக்குகிறேன். வாழ்வுக்கு உதவ மரங்களை வளர்க்கிறேன். இன்றைய மனித கரங்கள் செய்வது......? ''

என் மனச்சான்று வலித்தது.

ஆதாரம்
ஆடி - ஆவணி 1993





# அழியாத ஒன்று!

"இப்போது பூமியில் இலை தழைகள் முளைக்கின்றனவா?"

இது வெள்ளாடு எழுப்பிய கேள்வி.

"புற்தரைகள் இன்னும் பூமியில் இருக்கின்றனவா?"

இது செம்மறியின் சந்தேகம்.

"இவற்றையெல்லாம் நாங்கள் முற்றாக மேய்ந்து அழித்துக்கொண்டல்லவா இருந்தோம்?"

தாங்கள் இப்போது இருப்பது எங்கு? உலகை விட்டு – உடலைவிட்டு – தாம் வந்தது எவ்வாறு என்பதை விளங்காத மயங்கு நிலையிலிருந்த அந்த வெள்ளாடும் செம்மறியும் எழுப்பிய கேள்விகளுக்கு–

பதில் எதுவும் கிடைக்கவில்லை! காலம் இவற்றைப் பொருட்படுத்தாது ஓடிக்கொண்டிருந்தது!

"அந்த யூத இனம் அழியத்தான் வேண்டும். அவர்களைக் கோடிக்கணக்கில் கொன்று குவிப்போம்! முடிப்போம்!

– நாம் அரசாள வந்த எசமான இனம்!" என ஜேர்மனியில் கட்டவிழ்த்து நின்ற கொடியவன் ஹிட்லரின் குரல் வலுவிழந்து மங்கலாய் வேறெங்கோ மறைந்தது! அதனை அறிவதற்கு அவன் இல்லை. அவன் என்ன ஆனான் என்பதையும் கணக்கெடுக்காது காலம் ஓடிக்கொண்டிருந்தது.

"என்னுடன் எவரும் மோதமுடியாது. நான் அரச படைகளை ஆளும் அமைச்சர்! தமிழரை மட்டுமல்லாது எதிர்த்து வரும் எம் சிங்கள இளைஞரையும் பல்லாயிரக் கணக்கில் நான் கொன்று முடிப்பேன்" எனக் கொக்கரித்து நின்ற அந்தக் 'கஞ்சனும்' இன்றில்லை!

இவை அனைத்தையும் கடந்து காலம் ஓடிக்கொண்டிருந்தது!

மிகத் தூரத்தில், பூமியில், நாயொன்று குரைத்துக்கொண்டிருந்தது.

இன்னொரு இடத்தில் புடையன் பாம்பொன்று சத்தம் எதுவுமின்றி சருகுகளின் இடையே மறைந்துகொண்டிருந்தது.

இவற்றையும் கவனியாது காலம் ஓடிக்கொண்டிருந்தது!

அதே மண்ணுலகில் இன்னொன்றும் நடந்துகொண்டிருந்தது –

மேடையில் மனித நா ஒன்று பேசிக்கொண்டிருந்தது! மிக நயமான உரைகளை அது ஆற்றிக்கொண்டிருந்தது!

"நாங்கள் மனிதகுலம். அகிம்சை எங்கள் மதம். அன்பைக் கடைப்பிடிப்போம். அனைவரையும் அரவணைப்போம்" என அந்த – அரசியற் பெருமகனின் – பொய்மை நா தன் குரலை எழுப்பிக்கொண்டிருந்தது!

–இங்குதான் ஒரு அதிசயம் நடந்தது–

என்ன ?

எதற்கும் அசையாத காலப் பெருவலு ஒருகணம் கண்சிமிட்டிச் சிரித்தது!

என்ன அதிசயம், அல்லது அக்கிர மமா?

மேடை மின்னெலாம் மறைந்தது! அங்கிருந்த மனிதர்களும்தான்! கறை படிந்த நிலத்தை மேலும் கறையாக்கிய படி சில துண்டங்கள் கிடந்தன!

86

மனிதக் கூக்குரல்கள், குற்றச்சாட்டு கள் பறந்தன!

ஆனால் இவை எவையும் நடைபெறா தது போல காலம் தொடர்ந்தும் ஓடிக் கொண்டிருந்தது!

''நீ காலம் அல்ல, கா.... ல....ன்! எதையும் அழிப்பவன்'' என அதனைக் கீழிருந்த குரலொன்று சபித்தது.

''இல்லவே இல்லை! காலம் ஒரு கருவி மட்டுமே. தவறாது அழிப்பதும் ஆக் குவதும் நான்!''

இவ்விதம் பெரும் குரலொன்று முழங் கிற்று.

சபித்துநின்ற சிறு குரல் திகைத்தது! விடை எங்கிருந்து எழுந்தது? விளங்காத தடுமாற்றம்...! மீண்டும் அந்த எட்டாத குரலின் அழுத்தம் நெஞ்சத்தில் வீழ்ந்தது!

''விளங்கிக்கொள்ளுங்கள். வலிமை, திறமை மட்டும் பலியாது! நேர்மையும் அவ சியம்! உன் செயலால் எழும் விளைவு உனக்கே! இதில் நான் தவறு விடேன்...!''

''நீ யார்?, நின் பெயர் என்ன?'' என இரக்க முனைந்தது சிறிசு!

''அறம்!''

இந்த ஓர் இறுதிச் சொல்லுடன் அனைத்தும் நின்றன.

விடுதலைப் புலிகள்
வைகாசி 1993



# மனக்கிருமி!

மறைந்து மறைந்து ஒரு பெருந்தீமை ஓடிக்கொண்டிருக்கும்; அதன் தாக்கத்தால் அடிபடும் அவல உயிர்களின் குரல்கள் கேட்கும்; அதற்கு மேலாக அந்தக் கொடுமையின் கனைப்பும் இடையிடையே காதுக்கு எட்டும். ஏதோ பாழ்போல இது ஆகி வருகிறதா?

ஆய்வின் துணைகொண்டு இதனை மடக்கிப்பிடிக்க முனைந்தபோது, ஒரு விரியன் பாம்பின் உடல் வெளிக்கு வந்தது.

"நீ எத்தனை பேரைக் கொன்றாய்?"

"நான் ஒருவனைத் தீண்டி முடிக்க மற்றையோர் கண்டு என்னை அடித்து முடித்து விட்டார்கள்" என்றது பாம்பு.

"சரி, நீ போகலாம்" என்றேன்.

அடுத்த தேடலில் நீண்ட கொளுக்கிப் புழு ஒன்று அகப்பட்டது.

"நீ குழந்தையின் குடலில் நுழைந்திருந்து அதனை மெல்லெனக் கொல்ல முனைந்தாயல்லவா?" எனக் கேட்டேன்.

"ஆனால் அவர்கள் மருந்தைக் கொடுத்து என்னை விரட்டி வெளியேற்றி விட்டார்களே!" என இரங்கிற்று அது.

"சரி, நீயும் போகலாம்" என்றேன்.

நடுவயதுத் தந்தை ஒருவன் இளைத்து இளைத்து எலும்பாகிக்கொண்டிருந்தான். அவன் இரவில் இருமிய சத்தம் ஏனையோரைக் குழப்பியதை உணர்ந்தான்; எனினும் மெதுவாக இரும அவனால் முடியவில்லை.

"நோயே, நீ ஏன் மனிதனை வருத்தி முடிக்கிறாய்?" என்றேன். தொடர்ந்து ஆய்ந்தேன். நோய்க்குக் காரணமாகிய நோய்க்கிருமிகளும் இழுபட்டு, அவை கண்ணாடிமூலம் பெரிதாகக் காட்சி தந்தன. ஆனால் அவை நடுங்கிக்கொண்டிருந்தன. 'நவீன மருத்துவமூலம் நாம் இனம் கண்டு அழிபடும் நிலையிலுள்ளோம்' என அவற்றின் ஏக்கத்துடிப்பு காட்டிக்கொண்டிருந்தது.

"உங்களையும் அல்ல நான் தேடுவது" என்றது என் குரல்.



இப்போதும் அந்த முன்னைய ஒலிக் கும்மாளம் கேட்டுக்கொண்டிருந்தது. அதே வெற்றிக்களைப்பு! பின்னர் மௌன இடைவெளி. மீண்டும் அந்தக் கொடுமையின் பிடிக்குள்ளான துயர்களின் முனகலே கேட்டது.

என் இமைகள் மூடின; நெஞ்சம் திறந்தது. எம் பாழான சமூகம் தெரிந்தது.

பரம்பரை பரம்பரையாய் வந்த வாட்டங்கள் — வாழ விரும்பும் ஏக்கங்கள் — பொறாமைச் சுவாலைகள் — சொல் ஈட்டிகள் — பிரிவுகள் — பிளவுகள் தெரிந்தன.

இரத்த ஓட்டக் குறைவு தெரிந்தது. அதைத் தொடர்ந்துவரும் நோய்களும் தெரிந்தன!

சுற்றி இறுக்கும் ஒரு மலைப்பாம்பும் தெரிந்தது. உள்ளே எதிர்ப்பின் அசைவு தெரிந்தது; எனினும் இரத்தத்தைச் சொட்ட வைக்கும் இறுக்கம் இன்னும் தெரிந்தது.

காரணம் என்ன என நெஞ்சம் குமுறியது!

“நான்தான்” என்ற ஏளன விடை உடன் கிடைத்தது!

“என்ன?”

“ஆம், நீங்களாகிய நான்தான்!”

இது அந்த ஏளனப் பதிலின் பெருங்குரலாக எழுந்தது.

“யார் நீ?” என்றேன்.

“உங்களுள் வாழும் நான்.”

“யார்?”

“உங்கள் சொந்த உணர்வு .....உங்கள் . . மனக்கிருமி!”

“என்ன?”

“ஆமாம், உங்கள் சா...தி...யம்!” என எக்காளமிட்டது அது.

விடுபடப்போகிறோமா? இல்லையா...?





# எது?

தூரத்து வானிலே ஏதோ சில தெரிந்தன. அவை மனித உருவங்கள் அல்ல; மலர்களும் அல்ல.

" இவை எனக்கு " என்றது முகில் நீர்.

" இல்லை, எனக்கு" என விரைந்தது காற்று.

" அவை எனக்கே " என நிலைத்து நின்றது வெளி! முன்னர் நிகழாத புதுமை இவை!

முன்பு?

இதை எண்ணியபோது நெஞ்சம் இடிந்து, ஓர் அசிங்க அதல பாதாளத்தில் வீழ்ந்தது! அங்கு எதற்கும் சிறகு கிடையாது, காற்றுக்குக்கூட! உடற் கனதி, ஆசையின் நனைவு, அச்சம், நாம் உண்டு உறங்கி வாழ்ந்தால் போதும் என்ற ஊர்வனவின் நோக்கு!

இதுவும், தமிழர்களது முன்னைய நிலையா? இதே மண்ணில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வா? அங்கு -

"இரு" - என அந்நியர் கூற இவர்கள் இருக்கின்றனர்.

"எழும்பு" - அவ்விதமே எழும்புகின்றனர்.

இவ்விதம் முதலில் இருந்து எழும்பியவன் இவர்களின் தலைவராம்!

ஏதோ பட்டிட காட்சி கலைந்தது. காலத்தின் சுழல் ஒலி கேட்டது. அதே தமிழ்மண்தான்; ஆனால் காட்சியில் மாற்றம்! வேதனையின் கூடிய வலிப்பு.

தமிழர்கள் இப்போ தூங்கவில்லை, விழித்தபடி ஒடுங்கிக்கிடக்கின்றனர்!

இடைக்கால அடக்கமும் பயமும் எதிரிகளுக்கு உரமாகி, உற்சாகத் துணிவாகி விட்டதாம்! அவை கும்மாளம் கொட்டுகின்றன! கைது செய்தல், காணாமற்போக்கல்! கொலை! கற்பழிப்பு! எம் நாடும் நிலமும் பறிபோகின்றனவா.....? இல்லை! இல்லை!

என்னை அறியாது படுக்கையில் எழுந்தேன் மீண்டும் பாழும் உறக்கம் ..... கனவுகள்! கனவுகள்! அங்கு-

பொந்துக்குள் பயந்து ஒளிந்து பிடிபட்ட உடும்பு. எதிர்க்கும் இயல்பற்று ஓடி ஓடி அடிபட்டு விழுந்த முயல்! இதைத் தொடர்ந்து-

நாயொன்று பூனையைப் பிய்க்க ஓடி வரும் காட்சி தெரிந்தது. ஆனால் பூனை? அது திடீரெனத் திரும்புகிறது -

உடல் தயார் ஆகிறது.

அதன் முன்கால் இப்போ கூரிய ஆயுதமாய் மாறுகிறது. அதைக்கொண்டு ஒரு அடி! அந்த நகக் கீறல் பட்ட நாயின் முகத்தில்

இரத்தம் சுரக்கிறது. தனது கண் தப்பியது போதும் என நாய் மறைகிறது!

"போதுமா?" இது பூனையின் உறுமல்!

மீண்டும் பலத்த உறுமல். ஆனால் பூனையின் உறுமல் அல்ல, இப்போது புலிகளின் உறுமல்!

விடிவை மனதிற் பதித்து எழுந்த இளம் சந்ததியின் குரல்.

– அதற்குரிய தலைமை.

தொடர்ந்த உறுதி, துணிவு, ஆற்றல், எத்தனையெத்தனையோ வகைத் தியாகங்கள்!

பகைவனின் கும்மாள ஒலி குறைவது கேட்டது.

கொடுமை அனைத்தையும் செய்வித்த பெரும் பூதங்கள் சிதறி மடிவது தெரிந்தது.

"இந்த விடிவுக்கு உரித்தானோர்......?

இனியும் தூங்கமுடியவில்லை; எழுந்து பார்த்தேன். வானம் தெளிவாகத் தெரிந்தது. அங்கு சில துகள்கள் ஒளி வடிவாய்த் தெரிந்தன.

"இவை எனக்கு" என்றது காற்று.

"இல்லை, எனக்கு" என்றது வானம்.

"இல்லை, எனக்கே" என்றது அழியாத வெளி.

என்ன அது என்ற ஆவலாய் என் உள்ளம் துடித்தது. என்ன அது...?

பதில் இடிபோல எழுந்தது -

"முகம்தெரியாத தற்கொடை......

– தற்கொடை......!"

விடுதலைப் புலிகள்
ஆனி - 1993




# வரலாற்றுப் பதிவில்

"வரலாறே, உன் பதிவுகளைப் பார்க்கலாமா?" என்றேன்.

"நீ யார்?"

"நடந்ததை அறிய விரும்புபவன்" என்றேன்.

"அது போதாது!" எனச் சிரித்தது வரலாறு.

"விடுதலை மண்ணில்......" எனக் கூறிமுடிக்கு முன் –

"அப்படிச் சொல்!" என்ற பலத்த ஒலி கேட்டது.

கட்டடம் ஒன்று தெரிந்தது. அதன் கதவுகள் திறந்தன. அது தொல்பொருட் கூடமா? நிறைந்த நூல் நிலையமா? இல்லை, காலத்தைக் காட்டி நின்ற களஞ்சியப் பெருங்காட்சியகமா?

தேசிய நூலகப் பி
மாநகர நூலக
யாழ்ப்பாணம்
29940

கண்ணைப் பளிச்சிடும் கருத்து வரிகளும், கவின்கொள் ஓவியங்களும், எட்டிய தூரமெல்லாம் நூல்களும், இன்னும் பல புது சாதன விளக்கங்களும் தெரிந்தன. வளைவுகள், பிரிவுகள் என அவை விரிந்து கொண்டிருந்தன.

சுவரில் ஒரு பெரும் நாட்காட்டி அன்றைய தேதியை 21 ஆம் நூற்றாண்டை - காட்டி நின்றது! ஆம், அது 21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி!

யான் இறந்த, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி நினைவுக்கு வந்தது. இது இங்கு பெரிதல்ல! அசுர அழிவுகளின் நடுவே விடுதலையின் விடிவைக் காட்டி அதற்கு ஒளியான இன்னுயிர்கள், அங்கு அனலாக நின்ற நெஞ்சங்கள், மனத்துள் உயிர்த்தன.

அதன் பின் எழுந்த நிகழ்வுகள் எது வெதுவோ? பதைப்புற்ற உணர்வோடு பார்த்தேன். எதிரே காணக் கிடைத்த காட்சியில் -



பருத்த பல நூல்கள் இப்போ தூசி படிந்து ஒரு புறம் அடுக்கிக்கிடந்தன!

"அவை அழிந்தொழிந்த ஏகாதிபத்திய நாடுகளின் கதை; அதைத் தொடர்ந்து சிதறுண்ட உலக வல்லரசுகளின் கதை" என்ற ஏளனப் பரிவுடன் குரலொன்று விளக்கிற்று!

"அவை அழிந்த விதம்?"

பதில் போலப் பூகோளப் படமொன்று எதிர்ச் சுவரிற் தெரிந்தது. அங்கு சிதைந்து மங்கிய சில எழுத்தின் மேல் புதிய ஒளிக் கதிர்கள் மின்னின!

"இவை விடுதலை நாடுகள் - விடுதலையை வருவித்த நாடுகள்! பயந்தவை மாண்டதும் துணிந்துதொடர்ந்து எழுந்தவை வாழ்ந்ததும் உலக வரலாறு! அழிக்க வருவதை அழிப்பதே அறம்!"

இக்குரலைக் கேட்டபடி உள்ளம் சிலிர்க்க, இதயம் ஆர்ப்பரிக்க, இன்னொரு

கூட்டம் தந்த காட்சியுள் நின்றேன்! அங்கும் இசை வரிகள் முரசொலித்தன!

"நெஞ்சினில் விடுதலைக் கனலைச் சுமந்தீர்,

நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்!"

ஆம், இவை எம் ஈழத்தின் வரிகள்! எதிர் முன் தெரிவதும் சுதந்திரத் தமிழீழத் தாயகத்தின் திடன் உரைக்கும் வரைபடம்! இவ்வேளை –

மீண்டும் இலத்திரனியற் காட்சிகள் எழுந்தன! அவை வரலாற்றுத் தொடர்கள்!

அங்கு ஆணவ அடக்குமுறையின் – கொடூர இன ஒழிப்பின் – கரங்கள் தெரிந்தன.

நீதியை நெரித்தெழுந்த அரசியற் சட்டங்கள், மருந்து வகையிலும் கூடத் தடைகள், படையின் அக்கிரமங்கள், படுகொலைகள், நில ஆக்கிரமிப்புக்கள், விமானம் பொழிந்த தீச் சுவாலைகள் – இவ்வளவையும் எதிர்த்து நிற்கிறது –

மக்களின் மன உறுதி; பழகிவிட்ட அஞ்சாமை உணர்வு–

அந்த உறுதிக்கு உயிரூட்டி நிற்கும் தலைமை!

"உயிர் நீப்பர் மானம் வரின்" – இது தன்மானத்திற்குக் கேடுவரின் – என்ற பொய்யா மொழியை மெய்ப்பித்த புதிய தலைமுறை எழுந்த காலம்! கையிலே ஆயுதமும் கழுத்திலே 'சயனைட்'டும் அணிந்திருந்த களம்!

அதன் காட்சிகள் சில மேலும் மீட்டப்படுகின்றன! இதோ –

சிவகுமார், சங்கர் –

மாதோட்டத்திலே சிங்களப் படையினரைக் களமாடிக் கைதாக்கிய மாவீரன் விக்ரர் –

இந்திய சிங்கள ஆணவப் பரிமாறலுக்குப் படுதோல்வி புகட்டிய புலேந்திரன், குமரப்பா குழுவினர்—

ஆயுத ஆய்விலே உயிர் நீத்த பொன்னம்மான் போன்ற செம்மல்கள்—

கரும்புலிகள் மில்லர், போர்க்— கடற்புலிகள் கொலின்ஸ், காந்தரூபன், வினோத் —

மேஜர் சோதியா, லெப். அனிதா ஆகிய காவிய வரிசைகள் —

தமிழீழ விடுதலைக் குரலை தாயகத்தைக் கடந்தும் ஒலிக்கவைத்த விறல்நிறை திலகங்கள் —

இந்திய அநீதியை எடுத்துரைக்கத் தம்மை ஆகுதியாக்கிய தியாகி திலீபன், அன்னை பூபதி —

சமாதானத் தூதுவனாய் வந்து இந்தியச் சதிக்குச் சரணடைய மறுத்து — விடுதலைப் புலிகளின் மரபை ஆழ் கடலிலே பதித்த உலகறிந்த தளபதி கிட்டுவும் மற்றும் ஒன்பது வீர வேங்கைகளும் —

இவ்வித இன்னுயிர்ப் பரம்பரையில் உள்ளோர் ஒன்றிரண்டல்ல, ஆயிரமாயிரம்! இவை வரலாற்றுப் பதிவேட்டின் அழியாத பதிவுகள்! இவ்வேளை—

வெளியிலோர் பரபரப்பு; அது யாதென வினவுமுன் அந்த முனைப்பில் நின்றேன்.

அது ஒரு சர்வதேச ஆய்வுக்குழு. அவர்களுள் சிலர் ஆர்வத்துடன் புலிச் சின்னத்தைத் தம் அங்கியில் அணிந்திருந்தனர். அவர்கள் தளபதி கிட்டு தமது படகினைத் தகர்த்துச் சங்கமமாகிய ஆழ் கடலின் அடியினை ஆய்வுசெய்யப் புறப்படுகின்றனராம்!

விடுதலைப் புலிகள்
தை மாசி 1993

99058



" ஐயாவின்
எழுத்துக்கள்
ஒரு புலிவீரனின்
துப்பாக்கியிலிருந்து
கனன்று செல்லும்
ரவைகளைப் போல
ஆவேசம்
நிறைந்ததும்,
சக்தி
வாய்ந்ததுமாகவே
இருக்கின்றன. "

— பதிப்புரையிலிருந்து